Phone No. 2161

ஜனசக்தி

ஆசிரியர் ப. ஜீவானந்தம்

JANASAKTHI

(காலைப் பதிப்பு)

மலர் 16 இதழ் 60]
சென்னை 16-10-59 விகாரி ஹூ புரட்டாசிமீ 30உ வெள்ளிக்கிழமை
[4 பக்கங்கள் 7 காசுகள்

இந்திய தொழில் வளர்ச்சிக்கு அமோக சோவியத் உதவி

இலங்கை சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பொதுத்தேர்தல் நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, அக். 14— உடனே பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று எல்லா எதிர்க்கட்சிகளும் கோருவதானது, தேச மக்களின் நலன்களுக்கு விரோதமானதென்று இலங்கை சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழுள்ள வானொலி கூறிற்று. உடனே பொதுத் தேர்தல் வைத்தால் நாட்டிலே குழப்பமும் பூசலும் தான் ஏற்படுமென்று அந்த வானொலி திருப்பித் திரும்ப தினந்தோறும் பிரச்சாரம் செய்கிறது.

"மிகப் பெரிய முக்கியமான பிரச்சினையின் பேரில் தேர்தல் நடத்தி, அதில் சர்க்கார் தரப்பினர் தோற்றுள்தான் பொதுத் தேர்தல் வைக்க முடியும்" என்றும் வானொலி கூறியது.

எதிர்க்கட்சித் தலைவர் என். எம். பெரேரா பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்றும், அக்கோரிக்கைக்கு சகல எதிர்க்கட்சிகளின் ஆதரவுமிருக்கிறதென்றும் தெரிவித்தார். அதை சகல முக்கியமான இலங்கைப் பத்திரிகைகளும் பிரகாசமாக வெளியிட்டன.

எதிர்க்கட்சித் தலைவர்கள், தஹநாயகாவின் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். அச்செய்தியை பத்திரிகைகள் வெளியிட முடியாதவாறு சர்க்கார் தடுத்துவிட்டது.

பண்டாரநாயகா கொலையுண்டதையடுத்து, வெளியிடப்பட்ட அவசரகாலப் பிரகடன உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகள் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றன. வருகிற 27-ம் தேதி சட்டசபை கூடுகிறது. அதில் இவை பற்றி விவாதம் நடக்கும்.

சர்க்காரின் பத்திரிகை தணிக்கை உத்தரவைக் கண்டித்து கடந்த 9 நாட்களாக எந்தப் பத்திரிகைகளும் தலையங்கமே எழுதவில்லை. தலையங்கப் பகுதியை வெள்ளையாக விட்டு விடப்பட்டுள்ளன.

ஐஸன்ஹோவருக்கு 69 ஆண்டு நிறைவு
குருஷ்சேவ் வாழ்த்து

மாஸ்கோ, அ. 15— அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு, அவரது 69 வது பிறந்த நாளை ஒட்டி பகர்நு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

"நம் இருநாடுகளிடையிலும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பூரணமாகப் புரிந்துகொள்வதற்கு, என்றென்றைக்கும் சிநேகபூர்வமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும், பொதுவான சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக அவசரமான பிரச்னைகளில் தீர்வு காண்பதற்கும் தேவையான முயற்சி எடுப்பதற்கு நீங்கள் இணக்கமாக இருக்கிறீர்கள் என்ற என் நம்பிக்கையை நாட்டுடைய சந்திப்பும், சம்பாஷணைகளும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன" என்று குருஷ்சேவ் அந்த செய்தியில் குறிப்பிடுள்ளார்.

மிகவும் அனுகூலமான அடிப்படையில் கடன் தரப்படுகிறது

இயந்திர சாதனங்கள் இனி இங்கேயே உற்பத்திசெய்யப்படும்

மாஸ்கோ, அக். 14—

சில நாட்களுக்கு முன் டில்லியில் சோவியத் சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் இடையே கையெழுத்தான உடன்படிக்கையின்படி, பீ.ார் ராஜ்யத்திலுள்ள பரௌனியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவதற்கு சோவியத் யூனியன் உதவி செய்யும். ஆண்டொன்றிற்கு 20 லட்சம் டன் எண்ணெய் சுத்திகரிக்கவல்ல இந்த ஆலையை நிறுவுவதற்காக சோவியத் யூனியன் இந்தியாவுக்கு 10 கோடி ரூபிள் நீண்ட தவணைக் கடனை அளித்துள்ளது.

பெரிய அளவு இயந்திரத் தொழில் நிலையங்களை இந்தியாவில் நிறுவுவதற்கான சோவியத் திட்டங்கள் [illegible] இந்திய சர்க்கார் ஆராய்ந்து வருகிறது. கட்டட கிரயம் [illegible] பதற்கான இயந்திர சாதனங்களையும், இரசாயன ஆலைகளுக்கான இயந்திர சாதனங்களையும், உருக்கு தயாரிப்பதற்கான இயந்திர சாதனங்களையும் [illegible] அழுத்து இயந்திர பட்டறைகள் ரோலிங் ஆலைக்கான இயந்திர சாதனங்களையும் உற்பத்தி செய்யவல்ல கனரக இயந்திரங்கள் கட்டும் தொழில் நிலையத்தை நிறுவுவதும் இத்திட்டங்களில் ஒன்றாகும். சுரங்கத் தொழில் சாதனங்களை உற்பத்தி செய்யும் [illegible]

[illegible]

மூன்றுவது திட்டம்பற்றி விரிவான கருத்து வெளியிடுக

அரசியல் கட்சிகளுக்கு அமைச்சர் சுப்பிரமணியம் வேண்டுகோள்

திட்ட ஆலோசனைக்குழு கூட்டம்

[illegible]

எல்லோரையும் வரவேற்றுப் பேசிய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் கூறினார்.

திட்டம் தருக

மூன்றாவது திட்டம் பற்றி [illegible] அரசியல் கட்சிகள் தனித்தனியே மூன்றாவது திட்டம் பற்றி விரிவான கருத்துக் [illegible]

[illegible] உடல்நலம் சரியாக யில்லாதகால் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அடுத்த கூட்டத்தில் கலந்து கொள்வதாக அவர் மந்திரிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அரசியல் கட்சித் தலைவர்கள் வேறு வேலை காரணமாக கூட் [illegible]

[illegible]

வாலாஜாவில் முதல் நடவை

[illegible]

இரும்பு நிலக்கரியும்

[illegible]

முதலமைச்சர் பேச்சு

[illegible]

சின்னதுரை

[illegible]

வைத்தியத்துறை உதவி

[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

குரோம்பேட்டையில் ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளரின் அறப்போர்

12 நாட்களாக சாப்பிடாமல் வேலைசெய்கின்றனர்

சென்னை, அக். 15— குரோம்பேட்டையிலுள்ள அரசாங்க ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளர்களின் குறைகள் சம்பந்தமாக பல ஆண்டுகளாக வந்த [illegible] காரணத்தால் மேற்படி தொழிலாளர்கள் அரசாங்கத்திற்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முன் அறிவிப்புக் [illegible] 5-10-59 முதல் உணவருந்தாமல் ஒரு மணி நேரம் அதிகமாக ஓய்வின்றி வேலை செய்து [illegible] நடத்தி வருகின்றனர்.

இதுவரை சங்கமோ, அதிகாரிகளோ எவ்வித அக்கறையும் எடுத்துக்கொள்ளாமல் அலட்சியமாக இருந்து வருகிறார்கள். காலை 8 மணிக்கு வேலைக்கு வரும் தொழிலாளி காலை 10 மணிக்கு உண அருந்தாமலும், பகல் 12 மணிக்கு சாப்பிடாமலும், அந்த ஓய்வு நேரத்தில் வேலை செய்து கொண்டும் பிற்பகல் 3 மணிக்கு டீ அருந்தாமலும் மாலை 5 மணி வரை வேலை செய்யும் போராட்டம் நாளுக்குநாள் வலுவடைந்து வருகிறது.

போராட்டம் இன்று 11-வது நாளாக நடைபெறுகிறது. இதுவரை பதினைந்து தொழிலாளர்கள் பசி தாங்க முடியாமல் மயக்கமுற்று விழுந்துள்ளனர். இப்படிப்பட்ட ஆபத்தான நிலை ஏற்பட்டும் அதிகாரிகள் ஒரு விசாரணை செய்யக்கூட முன்வரவில்லை.

தொழிற்சங்க வேண்டுகோளுக்கிணங்க லேபர் ஆபீசர் முன்னிலையில் தொழிலாளர் பிரதிநிதிகளும், மானேஜ்மெண்டாரும் மூன்று நாட்கள் நடத்திய பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. லேபர் ஆபீசரின் அபிப்பிராயப்படி இருதரப்பும் செய்து கொள்ள வேண்டிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவிட்டார்கள்.

கோரிக்கைகள்

பண்டிகை விடுமுறை நாள் சம்பளம், 28-3-52 (ஜி. ஓ. எம். எஸ். நெ. 1381) உத்தரவுப்படி [illegible] சம்பளம், போனஸ் ரூ. 5 உற்பத்தி போனஸ் ஆண்டிற்கு 2 மாத அடிப்படை சம்பளம், காரணமின்றி நீக்கப்பட்ட தொழிலாளருக்கு மீண்டும் வேலை போன்ற [illegible] நியாயமான கோரிக்கைகளை தொழிலாளர் சமர்ப்பித்துள்ளனர்.

அணு நண்டு பட்டாசுக்குத் தடை

சென்னை அக். 15— பெரிய சைஸ் அணுகுண்டு பட்டாசுகளை வெடிக்கக்கூடாதென்று சென்னை போலீஸ் கமிஷனர் ஒரு தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

காங்கிரசிலிருந்து பிரிஜ்லால் பியானி விலகல்

அகோலா அக். 15— விதர்ப்பா காங்கிரஸ் தலைவர் பிரிஜ்லால் பியானி காங்கிரசிலிருந்து விலகினார். இவர் தனி விதர்ப்பா ராஜ்ய [illegible]

வேலூரில் ஜீவா

18-10-59 மாலை 6 மணிக்கு [illegible] என்பது பற்றி 3 [illegible]

திருப்பத்தூரில்

திருப்பத்தூர் (வ. ஆ.) நகராட்சி மன்றம் 17-10-59 சனி மாலை 5 மணிக்கு

தோழர் ஜீவாவிற்கு [illegible]

கோவை மில்களில் இடைக்கால போனஸ்

மற்றும் 25 மில்கள் தீபாவளி அட்வான்ஸ் தரவேண்டும்

தொழிற்கோர்ட் உத்தரவு

கோவை, அக். 15— கோவை ஜில்லாவிலுள்ள 25 பஞ்சாலைகள் தங்கள் தொழிலாளர்களுக்கு இடைக்கால போனஸ் கொடுக்க வேண்டுமென்று சென்னை இன்டஸ்ட்ரியல் டிரிபியூனல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

1957-58 வருஷங்களுக்கு இடைக்கால போனஸாக ஒரு மாதச் சம்பளம் [illegible]

[illegible] கண்டு பொதும டிரிபியூனல் உத்தரவிட்டது. [illegible] தீபாவளி அட்வான்ஸ் 1960 [illegible] முதல் ஆறு தவணைகளில் மீட்கப்படும்.

மேலே கண்ட பஞ்சாலைகள் மற்ற மில்கள் இவற்றின் நிர்வாகங்கள் அக்டோபர் மாதம் 24-ம் தேதிக்குமுன்பு இடைக்கால போனஸையும் தீபாவளி அட்வான்ஸையும் [illegible]

[illegible]

தீபாவளி அட்வான்ஸ்

[illegible]

(9 ஐ)

சென்னைக் கட்சித் தோழர்கள் கவனத்திற்கு

18-ந் தேதிய இ. எம். எஸ். பொதுக் கூட்ட கூப்பன்களை இன்று மாலை நெ. 1/73 பிராட்வேயில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

கே. முருகேசன்
செயலாளர்
சென்னை ஜில்லா கவுன்சில்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

தேனறு பாயுது; செங்கதிர் சாயுது ஆனாலும் வயிறு காயுது!

ஜனசக்தி

சென்னை 16-10-1959

சோவியத் உதவியும் அமெரிக்க உதவியும்

அமெரிக்கக் கடன் கோரி இந்திய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அமெரிக்கா விஜயம் செய்திருக்கிறார். அங்கு இந்தியாவின் லட்சியம் "சமதர்ம ஆட்சி" தானே ஒழிய சோஷலிஸமல்ல" என்றெல்லாம் கூறி அமெரிக்காவிடமிருந்து உதவி கோருகிறார்.

அமெரிக்கக் கடன் வாங்கும்போது நாம் எவ்வித நிபந்தனையுடனும் வாங்க மாட்டோம் என்று இந்தியப் பிரதமர் அடிக்கடி கூறிவருவது வாசகர்கள் அறிந்ததே. ஆனால் இன்று நடப்பது என்ன? இந்திய அரசாங்கத்தின் லட்சியம் சோஷலிஸ பாணியிலானது என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதை மறைத்து, [illegible] இந்திய அரசாங்கத்தின் ஒரு மந்திரி பேசுவது கொள்கையை அடகு வைப்பது தானே? இது அமெரிக்கக் கடன்காரர்களிடம் ஒரு நிபந்தனைக்குக் கட்டுப்படுவது தானே?

நமது நாட்டின் சுதந்திரக் கொள்கைக்கே இவ்வாறு பேராபத்து விளைவிக்கும் அமெரிக்காவிடமிருந்து நாம் வாங்கும் கடனின் தன்மையையும் சோவியத் யூனியன் இந்தியாவிற்கு அளித்து வரும் உதவியின் தன்மையையும் சற்று ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

அமெரிக்காவிடமிருந்து இதுவரை 170 கோடி டாலர் கடன் வாங்கி இருக்கிறது இந்திய சர்க்கார். மொரார்ஜியே தந்த கணக்கு இது. இதற்கு வட்டி என்ன தெரியுமா? 3½ சத விகிதத்திலிருந்து 5¾ சத விகிதம் வரையிலும் வட்டி கொடுக்கிறோம். பிரிட்டனுக்குக் கொடுக்கும் வட்டியும் 5½ சத விகிதம். மேற்கு ஜெர்மனிக்குக் கொடுக்கும் வட்டியோ 6 சத விகிதம்.

சோவியத் யூனியன் கடந்த நான்கு ஆண்டுகளில் நமக்கு மனமுவந்து, எந்த விதமான நிபந்தனையுமின்றி தந்த கடன் உதவி 420 கோடி ரூபிளாகும். இவைகளை நீண்ட தவணைகளில் திருப்பிக் கொடுக்கலாம். 12 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கலாம். வட்டி விகிதம் 2½ சத விகிதம்தான். இந்திய அரசாங்கம் நமது விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு வாங்கும் வட்டி 6 சத விகிதம் என்பதை இந்த இடத்தில் மனதில் கொள்வது அவசியம்.

அமெரிக்கா இந்தியாவிற்குத் தந்த கடனின் தன்மை என்ன? உளுத்துப்போன சோள மாவு, மக்கிப்போன மைதா, கோதுமை மாவு, அமெரிக்க விவசாயப் பண்ணைகளில் உபயோகித்து அங்கு உபயோகமற்றுப் போன கருவிகள்; பியூக், காடிலாக், குளிர் பானங்கள் போன்ற நமது மேல் வர்க்கக் கனவான்களுக்குத் தேவையான உபயோகப் பொருள்கள் இவைதான். ஒரு கனரகத் தொழிலாவது நமது நாட்டில் உருவாக்க உதவியதுண்டா? இல்லை.

மாறாக நமது நாட்டிலிருந்து கொள்ளை லாபம் சம்பாதித்து அதை அள்ளிக் கொண்டு போகும் விதத்தில் அமெரிக்க கம்பெனிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொரார்ஜியின் புள்ளி விபரப்படி ரூ. 68 கோடி இந்தியத் தொழில்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்தது 10 சதவிகித பங்கு லாபம் கிடைக்கிறது என்றாலும், ஆண்டிற்கு லாபமாக ரூ. 6 லிருந்து 7 கோடி வரை அந்த கம்பெனிகள் மட்டும் [illegible] செல்கிறது. இதுவல்லாமல் மானேஜிங் ஏஜென்ஸி [illegible] அமெரிக்க-இந்திய கம்பெனிகளின் [illegible] போக்குவரத்து லாப-

மெல்லாம் சேர்த்தால் கொள்ளை கொள்ளையாக இந்தியாவைச் சுரண்டிக் கொண்டு போகிறார்கள்.

இக்கொள்ளையை பலப்படுத்தவே [illegible] மொரார்ஜி இன்று அங்கு காவடி எடுத்துள்ளார். ஏன் தெரியுமா? அமெரிக்க முதலாளிகள் இந்திய நாட்டில் கொள்ளை லாபம் சம்பாதிக்கும்போது, அவர்களுடன் இந்திய முதலாளிகளும் சேர்ந்து கொண்டால் ஒரு பங்கு கிடைக்குமல்லவா?

அதனால்தான் சோவியத் யூனியன் இந்தியாவிற்கு தரும் உதவியை இந்திய முதலாளிகள் வரவேற்பதே இல்லை. ஏதோ ஒப்புக்கு ஒரு வார்த்தை கூறுவார்கள்.

காரணம் சோஷலிஸ நாடு இந்தியாவிற்கு உதவி செய்தால், கனரகத் தொழில்களைத் துவக்குவதில் அதில் அவர்கள் நேரடியாக, உடனடியாக லாபமடைய முடியாது. அது இந்திய அரசாங்கத்திற்கு, இந்திய மக்களுக்குச் சொந்தமாகிறது. அதனால்தான் மொரார்ஜி தேசாய், சோவியத் நாட்டின் உதவிக்கு இதுவரை ஒரு தடவைகூட நன்றி தெரிவித்தது கிடையாது. இந்திய முதலாளிகளும் அவர்கள் ஏடுகளும் நன்றி தெரிவிக்காதது மட்டுமல்ல, சுயநலமாக சோவியத் உதவியை எந்த விதத்திலெல்லாம் தூற்றமுடியுமோ அவ்விதம் தூற்றியுள்ளார்கள்.

எனினும் கோடானு கோடி இந்திய மக்கள், [illegible] தேச பக்தர்கள் சோவியத் உதவியை மனப்பூர்வமாக வரவேற்கிறார்கள். ஏன்? சோவியத் உதவி பாரத நாட்டின் பாங்கான வளர்ச்சிக்கு பெருந்துணை புரிகிறது. இது கண்ணால் காணும் காட்சி.

இதுவரை தந்துள்ள சோவியத் உதவியின் 420 கோடி ரூபிளும், நமது நாட்டில் 10 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகவும் (பிலாய்) ஆண்டிற்கு 25 லட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்யும் யந்திரங்களாகவும், ஆண்டிற்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்சார நிலையமாகவும் (நெய்வேலி) ஆண்டொன்றுக்கு 1500 டன் மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் யந்திரமாகவும், [illegible] எண்ணெய் தோண்டி எடுக்கும் யந்திரங்களாகவும் (ஜூனாகத், ஜுவாலாமுகி) ஆண்டொன்றிற்கு 20 லட்சம் டன் எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையாகவும் (பீகார் ராஜ்யத்திலுள்ள பரோனி) மலர்ந்து கொண்டிருக்கின்றன. இதுமட்டுமல்ல, [illegible] சோவியத் என்ஜினியர்களும் தொழிலாளர்களும் இங்கும் தொழிற்சாலைகளை கட்டி தருகின்றனர். இரு என்ஜினியர்கள் தம் இன்னுயிரையே அர்ப்பணித்துள்ளனர்.

ஆண்டாண்டு தோறும், மேற்கூறிய மூலப் பொருள்களுக்கு மேற்கத்திய நாடுகளையே நம்பியிருந்த இந்தியா இன்று அவைகளைத் தானே உற்பத்தி செய்து கொள்ளும் அரிய வாய்ப்பைத் தந்துள்ளது சோவியத். தலைநிமிர்ந்து நடக்கவும், தன் சுயேச்சையைப் பாதுகாத்துக் கொள்ளவும் இந்தியாவிற்கு உதவி செய்வது ரஷ்யா.

நாளும் உதவிபால் ஒவ்வொருநாளும் இந்தியாவின் செல்வத்தை அள்ளிக் கொண்டு போகத் திட்டமிடுவது மொரார்ஜி தேசாய்கள் மூலம் அழைக்கப்படும் அமெரிக்கா.

விலைவாசியைக் குறைக்க அதிகாரமில்லையா?

லாபக் கொள்ளையர்மீது நடவடிக்கை எடுத்தால் தேர்தல் நிதி கிடைக்காது என்ற பயமா?

உணவுப் போராட்டத்திற்கு கே. டி. ராஜு அறைகூவுகிறார்

திண்டுக்கல், அக். 14— "வர்த்தகச் சூதாடிகளின் கொள்ளையைப் பொறுத்தவரையில்தான், விலைவாசிகளை உயருவதற்கு மந்திரிகள் காரணம் சொல்லுகிறார்கள். காரணத்தைச் சொல்லுவதற்காகத்தான் இவர்கள் மந்திரிகளாக இருக்கிறார்களா என்று கேட்கிறேன்" என்று இவ்வாறு திண்டுக்கல் காந்தி மைதானத்தில் 11-10-59-ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டத்தில் தோழர் கே. டி. ராஜு கேள்விமாரி பொழிந்தார்.

கூட்டத்துக்கு திண்டுக்கல் தொழிலாளர் தலைவர் எஸ். ஏ. தங்கராஜன் தலைமை வகித்தார்.

என்ன செய்தீர்கள்? கே. டி. ராஜு கேள்வி

தோழர் கே. டி. ராஜு மேலும் பேசுகையில், "அப்படிக் கொள்ளை யடிக்கும் கோடீஸ்வரர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரை என்ன செய்தீர்கள்? உங்களிடம்தானே சட்டம் இருக்கிறது! உங்களிடம்தானே சிறைச்சாலைகள் இருக்கின்றன! உங்களிடம்தானே ராணுவம் இருக்கிறது! எப்படிப்பட்ட சட்டமும் உத்தரவுகளும் பிறப்பிப்பதற்கு சட்டசபையிலும் பார்லிமெண்டிலும் உங்களுக்குத்தானே மெஜாரிட்டி இருக்கிறது! அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தது உண்டா? இதைச் செய்யாமல் மந்திரிகள் மக்களிடம் வந்து சாதாரணமானவர்களைப் போலப் பேசி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட ஏமாற்றுப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு இனிமேலும் மக்கள் ஏமாறத் தயாராக இல்லை.

அறப்போர் எழுந்தது

"மக்களின் அத்தியாவசியத் தேவையான இந்த உணவு விலை உயர்வை எதிர்த்து அறப்போர் எழுந்துவிட்டது, கம்யூனிஸ்ட் கட்சி இதில் முன் நிற்கிறது. வாழ்க்கையை நேசிக்கும் அனைவரும், வயிறு உள்ளோர் அனைவரும், மக்கள் கட்சி என்று கூறக்கூடிய சகல கட்சியினரும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும், போராட்டத்தில் குதிக்க முன்வர வேண்டும்" என்று அழைத்தார்.

இரட்டை வேடம் போடாதே

கே. டி. ராஜு மேலும் பேசுகையில், "நமது தேசத்தில் மொத்த உணவுஉற்பத்தியானது சென்ற வருடத்தைவிட இவ்வருடம் ஒரு கோடி டன் அதிகமாகியிருக்கிறது. சகலருக்கும் 16 அவுன்ஸ் வீதம் கணக்கிட்டாலும் லட்சக்கணக்கான டன் மீதியிருக்கும். ஆனால் மந்திரிகள் "டபுள் ஆக்ட்" செய்கிறார்கள். ஒரு பக்கம் வர்த்தகச் சூதாடிகளைக் கண்டிப்பதுபோல ஒரு வேடமும், அதே சமயத்திலேயே அவர்கள் கொள்ளையடிப்பதற்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இன்னொரு வேடம் போட்டு மந்திரிகள் 'டபுள் ஆக்ட்' நடிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்.

தேர்தலுக்குப் பணம்

உணவு உற்பத்தி முன்னைவிட அதிகரித்தும்கூட, விலைவாசி ஏறுகிறது என்றும், அதைத் தடுக்க ஒருவித நடவடிக்கையும் எடுக்காமல், மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்ப சர்க்கார் முயற்சிக்கிறது. கோடீஸ்வரர்கள் மீதும் நிலப்பிரபுக்கள் மீதும் நடவடிக்கை எடுத்தால் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சிக்கு அவர்கள் பணம் தரமாட்டார்களே என்று நினைத்துத்தான் நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் சர்க்கார் பயப்படுகிறது. காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நிதி கொடுத்தவர்களின் பட்டியலைப் பார்த்தால், கொள்ளை லாபமடிப்பவர்களின் பெயர்கள் முழுவதையும் நீங்கள் காண முடியும்" என்று குட்டை உடைத்தார் கே. டி. ராஜு.

ராஜினாமாவும் ஏமாற்றும்

"மக்களிடம் வந்து இந்த மந்திரிகள் 'சோஷலிஸத்தின் அருமை பெருமைகளைப் பற்றியும் அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும் ஜம்பமடிக்கிறார்கள். 'பாருங்கள் அணைகளைக் கட்டியுள்ளோம்! ஆறுகளைத் தேக்கியுள்ளோம்! தரிசுகளையும், புஞ்சைகளையும் நஞ்சைகளாக ஆக்கியுள்ளோம், விவசாயத்தை விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்கிறோம், அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் கடைகளுக்குச் சென்றால் அண்ட விலை தின-

சரி இரண்டு முறை உயர்ந்தது. மந்திரிகள் பேச்சு என்ன? சர்க்கரை விலையின் நிலைமை என்ன? இதைப்பற்றி பார்லிமெண்டிலும் சட்டசபையிலும் நாங்கள் விடாப்பிடியாகக் கேட்டோம். ஆளும் கட்சியினர் முழுப்பூசணிக்காயை [illegible] உணவு மந்திரியை ராஜினாமா செய்யச் சொல்லி விட்டால், பழைய பாதையிலேயே காட்டை இழுத்துச் செல்லுகிறார்கள். மந்திரி ராஜினாமாவால் நாட்டு மக்களுக்கு என்ன பயன்? மக்களுக்கு நியாய விலையில் தானியம் கிடைத்துவிட்டதா?" என்று ஆணித்தரமாகக் கேட்டார்.

கரும்பு விலை உயரவில்லை சர்க்கரை விலை கூடுவதேன்?

"கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிக்கு, கடந்த 10 ஆண்டுகளாக அவர்களின் கரும்புக்கு விலை கூடவே இல்லை. சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளுக்கு கூடுதல் சம்பளமோ, போனஸ் உயர்வோ கிடைக்கவே இல்லை. அப்படியிருந்தும் சர்க்கரை முதலாளிகள் இஷ்டம் போல் விலை வைத்து விற்கிறார்கள். நிர்ணய விலை ரூ 1-10-0 ஆனால் வெளியில் 3 ரூபாய்க்கும் விற்கிறார்கள்" என்று புட்டுக் காண்பித்தார்.

மாணிக்கவேலரும் மாரடைப்பு நோயும்

சர்க்கரை விலை உயர்வைப் பற்றியும் ஜனங்கள் புகார் செய்தால், "சர்க்கரை சாப்பிட்டால் மாரடைப்பு நோய் வரும், சர்க்கரை சாப்பிடாதீர்கள்" என்று மந்திரி மாணிக்கவேலர் மகாப்பெரிய மருத்துவ மேதை போல உபதேசம் செய்கிறார். இதைச் சொல்லுவதற்கு ஒரு மந்திரி. அவருக்கு ஆயிரக்கணக்கில் மக்களின் வரிப்பணம் சம்பளம்! இவர்களெல்லாம் மந்திரிகளா அல்லது...?" என்று இடித்துக் கேட்டார்.

மந்திரி வீட்டிலே

"மாரடைப்பு வருகிறது என்று கூறும் மாணிக்கவேலரே! உங்கள் வீட்டில் காப்பிக்கும் டீக்கும் நீங்கள் சர்க்கரை போடுவதில்லையா? கருப்பட்டியைத் தான் உபயோகிக்கிறீர்களா? அப்படி மாரடைப்பு வருவது உண்மையானால், அந்த வியாதியை உண்டாக்கும் சர்க்கரை ஆலைகள் பெருகி வருவதை ஏன் தடை செய்யவில்லை? ஏன் லைசென்ஸ் கொடுக்கிறீர்கள்?

தியாகம் செய்ய வாரீர்!

மக்களின் பக்கத்தில் இன்றைய மந்திரிகள் இல்லை. அவர்கள் தானியக் கொள்ளை லாபக்காரர்கள் பக்கமும் சர்க்கரைக் கொள்ளைலாபக்காரர்கள் பக்கமுமே நிற்கிறார்கள்.

அதனால்தான் மக்களின் வயிற்றுப் பிரச்சினையை, வாழ்வுப்பிரச்சினையை முன்வைத்து, தமிழகமெங்கும் நியாயமான அறப்போர் நடத்தப் போகிறோம். அனைவரும் அணி திரண்டு போராட்டத்தில் குதிக்க வாரீர்!" என்று அறைகூவி அழைத்தார்.

சீனாவைக் காட்டி திசை திருப்புகிறார்கள்

"மக்களின் வாழ்வுப் பிரச்சினையை நாம் கிளப்பினால், இதோ இந்திய மீது சீனா படையெடுக்கப் போகிறது, போர் வந்துவிட்டது என்று கூக்குரல் போடுகிறார்கள். அரிசி விலையைக் குறை என்றால் சீனா [illegible] இப்படி மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு இப்பிரச்சினையைக் கிளப்பி வருகிறார்கள்.

இந்திய-சீன எல்லைப் பிரச்சினை இருநாட்டு சர்க்கார்களும் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை. எந்தவொரு கட்சியின் பிரச்சினையும் அல்ல.

சுரண்டல் வர்க்கத்தின் பாதுகாவலர்களின் ஓலம்

சீனா யுத்த முஸ்தீபு செய்வதாகவும், இந்தியா மீது படையெடுக்கப் போவதாகவும், கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு உடந்தையாக இருந்து இந்திய நாட்டைக் காட்டிக் கொடுக்கப் போவதாகவும் அசோக் மேத்தா, ஜெயப்பிரகாஷ் போன்ற பிற்போக்காளர்கள் ஓலமிடுகிறார்கள்.

இவர்கள் யார்? இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையை கடந்த 5 வருடகாலமாக எதிர்த்து வரும் கும்பல்! சோஷலிஸ நாடுகளுடனும் சோவியத் ரஷ்யாவுடனும் நட்புறவு கூடாது என்பவர்கள்! டாலர் அமெரிக்காவுடனும் அதனுடைய ஆக்ரமிப்புக் கூட்டணியுடனும் இந்தியா சேரவேண்டும் என்று கூதுகிறவர்கள்! ஆசிய ஆப்பிரிக்க மக்களின் மாபெரும் ஒற்றுமையைக் குலைக்க 100 கோடி இந்திய-சீன மக்களின் ஒற்றுமையைக் குலைக்க இரு நாடுகளையும் பகை நாடுகளாக்கினால்தான் முடியுமென்று கருதி, திட்டமிட்டு சதி செய்து வரும் ஏகாதிபத்தியங்களின் தாசர்கள்!

கோவா, பாண்டிச்சேரி

சீனா படையெடுக்கப் போவதாக வெறும் வெத்துவேட்டு கிளப்புகிறார்கள். கம்யூனிஸ்ட் நாடுகள் எதுவும் இன்னொரு நாட்டின்மீது படையெடுக்காது. தனது சொந்த நாட்டை சுவர்க்க பூமியாக்குவதில்தான் முனைந்து நிற்கும்.

கம்யூனிஸ்டுகள் தேசபக்தியில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. இந்திய நாட்டின் சுதந்திரத்துக்காக வேறு எந்தக் கட்சியினரையும்விட, அதிக தியாகம் செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

எங்களைப் பற்றி இழித்துப் பேசும் கூட்டத்தார், கோவா விடுதலைக்கு என்ன செய்தார்கள்? பாண்டிச்சேரியின் பூரண சுதந்திரத்துக்கு என்ன செய்திருக்கிறார்கள்?

போர்த்துக்கீசிய ஆதிக்கத்திலிருந்து கோவாவை விடுதலை செய்ய கம்யூனிஸ்ட் கட்சியினர் போராடி, உயிர் நீத்திருக்கிறார்கள். பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து பாண்டிச்சேரியை விடுவிக்க வீடுவாசல்களை இழந்தும், மண்டை உடைபட்டும், வேலைகளைப் பறிகொடுத்தும், சிறைகளை நிரப்பியும் தியாகங்கள் செய்தவர்கள் யார்? கம்யூனிஸ்டுகளா அல்லது கம்யூனிஸ்டுகள் மீது பாயும் இந்த பி. சோ. க்களும் காங்கிரஸ் கட்சியினருமா என்று கேட்கிறேன்.

சனியனும் லாமாவும்

"திபேத் சீனாவின் பகுதி. திபேத்தில் எப்படிப்பட்ட சமுதாய அமைப்பு இருக்க வேண்டும்; அதில் ஆட்சி முறை எப்படி இருக்க வேண்டும் என்ற பிரச்சினைகளெல்லாம் சீனாவின் உள்நாட்டு விவகாரம். அதில் தலையிட வேற்று நாட்டவர் யாருக்கும் உரிமையில்லை. அதுதான் பஞ்சசீலக் கொள்கை.

அப்படியிருக்க, அகதியாக வந்த தலாய்லாமாவை அகதியாக நடத்தாமல், சீனாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவும், திபேத்திய சர்க்கார், தானேதான் என்று கூறிக்கொண்டு பல தேச ராஜதந்திரிகளைச் சந்திக்கவும், அப்படிப்பட்ட தலாய்லாமாவுக்கு நேரு முதலிய அரசாங்கத் தலைவர்கள் விருந்துபசாரம் செய்து, வசதிகளும் அளித்து, மக்களின் வரிப் பணத்திலிருந்து 8 லட்சம் ரூபாய் சாப்பாட்டுச் செலவும் கொடுத்தார்கள். தலாய் லாமா இந்தியாவுக்கு வந்தார். அவருடன் சனியனையும் கூட்டிக்கொண்டு வந்தார் என்று கூறி பஞ்சசீலத்தை மீறியவர்கள் யார் என்பதை விளக்கிக் காட்டினர்.

ராணுவமே வேண்டாம்

"அமெரிக்காவுக்கு குருஷ்சேவ் சென்றிருந்தபோது, ஐ. நா. சபையில் பேசினார். உலக நாடுகள் எல்லாம் தத்தம் ராணுவங்களைக் கலைத்துவிட வேண்டுமென்றும் ஆயுதங்களை எல்லாம் அழித்துவிட வேண்டுமென்றும் சொன்னார். சோவியத் யூனியன் இதற்கு தயார் என்றும் கூறினார். பலஹீனத்தினாலா கூறினார்? அல்ல. சந்திரனுக்கு வெற்றிகரமாக ராக்கெட்டை அனுப்பி அற்புதம் நிகழ்த்திய பிற்பாடு, பனிக்கட்டிக் கடலை உடைத்துக் கொண்டு செல்லும் அணுசக்தி கப்பலை வெள்ளோட்டம் விட்ட பிற்பாடு, இப்படிப் பேசினார். இவ்வளவு முன்னேற்றமும் செழிப்பும் உள்ள சோஷலிஸ்டு நாடு எந்தவொரு தேசத்தையும் ஆக்ரமிக்காது. ஆக்ரமித்து, அடிமைப்படுத்தி, சுரண்டிப்பிழைக்க வேண்டுமென்ற வர்க்கங்கள் சீனாவிலோ ரஷ்யாவிலோ கிடையாது. ஆகவே இந்தியாவை ஆக்ரமிக்க வேண்டிய அவசியம் சீனாவுக்கு இல்லை.

பூச்சாண்டி பலிக்காது

சீன ஆக்ரமிப்பு என்று பூச்சாண்டி காட்டி, மக்கள் பிரச்னைகளைத் தட்டிக் கழித்து, மக்கள் நலனுக்காகப் பாடுபடும் கம்யூனிஸ்டுகளுக்கு செல்வாக்கு ஏற்படாதபடிச் செய்யவே ஆளும் கட்சியும், சுரண்டல் வர்க்க தாசர்களும் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். மக்கள் ஏமாறக் கூடாது என்று நீண்ட கரகோஷத்திற்கிடையே பேசிமுடித்தார்.

அஞ்சலி

பின்னர் என். வரதராஜன் மறைந்த மாவீரர்கள் ஒட்டன்சத்திரம் வெங்கடாசலம், இலரா. அய்யர் தேவர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர்களுக்கு அனுதாபம் தெரிவித்துப் பேசினார். தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திண்டுக்கல்லில் பாங்க் சிப்பந்திகள் மாநாடு

தோழர்கள் ஜோசப், சாமிநாதன் உரை

திண்டுக்கல், அக். 12— கரூர் வைசியா பாங்க் சிப்பந்திகளின் முதல் அகில மாநாடு 10, 11 தேதிகளில் நடைபெற்றது. எல்லாக் கிளைகளிலிருந்தும் 150க்குமேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். ஆரம்பத்தில் பாங்க் சிப்பந்திகளின் ஊர்வலம் ஒன்று நகர பிரதான வீதிகளின் வழியாக வந்தது.

மாநாட்டிற்கு தோழர் கே. பி. வெங்கிட சுப்பிரமணியம் தலைமை வகித்தார். அவர் தமது தலைமை உரையில் "ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அகில இந்திய பாங்க் சிப்பந்திகள் சங்கத்தின் பிராந்திய செயலாளர் தோழர் ஜோசப் பேசுகையில், "சங்கம் ஆரம்பித்த சில காலத்திற்குள் மானேஜ்மெண்டார் பயப்படக் காரணம் தங்களின் லாபவேட்டைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்கள் என்று கூறி, ஜாதியைக் காட்டி ஊழியர்களை மிரட்டுவதைக் கண்டித்தார்.

பாங்க் ஊழியர்களுக்காகத் தொடர்ந்து பாடுபட்டுவரும் பாங்கு ஊழியர் சங்கக் காரியதரிசி தோழர் ஆர். சாமிநாதன் பின்னர் பேசினார். தோழர் சாமிநாதன் பேசுகையில், சிறு பாங்கிகளின் ஊழியர்கள் தங்களுக்கென சங்கம் அமைத்துப் போராடும்பொழுது, எவ்விதம் பிறர் ஆதரவு தருவார்கள் என்பதை எடுத்துக் காண்பித்தார். மேலும் விலைவாசி உயர்ந்துகொண்டே போகும் இந்தக் காலத்தில் பாங்கர்கள் ஊழியர்களின் அலவன்சைக் குறைக்க முயற்சி செய்வதை கடுமையாக கண்டித்தார்.

தோழர்கள் என். கே. வெங்கடாசலம், முனிரத்தினம், சி. ராமசாமி ஆகியோரும் பேசினார்கள். சங்கம் ஆரம்பித்த பின்னர் மாற்றப்பட்ட ஊழியர்களை மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றவேண்டுமென்று கோரியும், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (க. நி)

வெள்ளை நிர்வாகம் பழிவாங்குகிறது

மூணாறு, அக் 9— கண்ணன் தேவன் கம்பெனி ஒர்க்ஷாப் தொழிற்சங்கச் செயலாளர் பெருண்டசை நிர்வாகம் யாதொரு காரணமும் இல்லாமல் டிஸ்மிஸ் செய்தது.

இப்போது நிர்வாகம் மைக்கேல் என்பவரையும் டிஸ்மிஸ் செய்துள்ளது. கம்பெனியின் இப்போக்கைக் கண்டித்து தேவிகுளம் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் இந்திய தேசிய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ராஜகோபால் என்பவர் செய்துவரும் சதி வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த அநியாயத்தை எதிர்த்து மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஓட்டர் பட்டியல்

மூணாறு, அக். 9— அக்டோபர் மாதம் 7-ந் தேதி தேவிகுளத்தில் வெளியிடப்பட வேண்டிய வாக்காளர் பட்டியல் இன்னும் வெளியிடப்படவில்லை. இதுபற்றி தேவிகுளம் மக்கள் பலவாறாகப் பேசிக் கொள்கின்றனர்.

தர்மபுரியில் உணவு இயக்கப் பொதுக்கூட்டம்

தர்மபுரி, அக். 12— தீர்த்தகிரியார் சதுக்கத்தில் கம்யூனிஸ்டு கட்சி சார்பாக தோழர் பலராமன் தலைமையில் பிரம்மாண்டமான உணவு விலை உயர்வு கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சி தலைவர் தோழர் கே. ரமணி விலைவாசி உயர்வும் சர்க்கார் கொள்கையையும் இந்திய-சீன நட்புறவிற்கு உலைவைக்கும் ஏகாதிபத்திய சதிகளை அம்பலப்படுத்தியும், கேரளத்தில் காங்கிரஸ் பிற்போக்கு சக்திகளோடு சேர்ந்துள்ளதை அம்பலப்படுத்தியும், ராஜாஜியின் பத்தாம்பசலி சுதந்திர கட்சியின் பணமூட்டையின் பாதுகாவல் கொள்கையை அம்பலப்படுத்தியும் உணவு போராட்டத்திற்கு சகல கட்சிகளும் பொதுமக்களும் ஆதரவு தரவேண்டும் என்று விரிவாக பேசினார்.

மக்கட் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அகால மரணம் அடைந்ததற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1000 ராத்தல் தேயிலை நன்கொடை

கொழும்பு, அக். 14— இலங்கை அரசாங்கம் 1000 ராத்தல் தேயிலை இந்திய அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. மேற்கு வங்கத்தில் வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்டவர்களின் துயரை குறைக்கவே இந்நன்கொடை வழங்கியுள்ளதாம்.

ஜப்பான் அரசாங்கத்திற்கும் இதே மாதிரி 1000 ராத்தல் தேயிலை சமீபத்தில் ஏற்பட்ட சூறாவளியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியுள்ளது. (பி. டி. ஐ)

புறப்படு! புறப்படு!! புறப்படு!!!

(கோடங்கால் மீனுப்பிகை)

புறப்படு! புறப்படு! புறப்படு!

உணவு விலை குறைத்திட
வறுமைப் பேயை விரட்டிட
ஊரை ஒன்று சேர்த்திடு
ஓரணியாய் புறப்படு (புற)

அரிசி விலை குறைத்திட
அனைவருக்கும் கிடைத்திட
அமைச்சரிடம் முறையிட
அணியணியாய் புறப்படு (புற)

சர்க்கரை விலை குறைத்திட
சகலருக்கும் கிடைத்திட
சர்க்காரிடம் முறையிட
சீக்கிரமாய் புறப்படு (புற)

பட்டினியை போக்கிட
பதுக்கியோரை பிடித்திட
திட்டமிட்டு செயல்படு
தியாகத் தீயில் குதித்திடு (புற)

உணவு விலை குறையவிட்டால்
உறுதியாக சபதங்கொள்
பதுக்கல்காரன் துணைவர்களை
பதவிவிட்டு விரட்டிடவே (புற)

ஆசிரியருக்குக் கடிதங்கள்

கவிஞனின் பிரிவுக்கு கைதியின் கண்ணீர்

ஐயா,

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மாண்டார் என்ற செய்தியை எனது தாயார் மூலம் கேள்விப்பட்டு அதிர்ச்சி படைந்தேன். அவருடைய பிரிவு திரை உலகுக்கு மட்டுமன்றி கலை உலகுக்கே, தமிழ் நாட்டுக்கே ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும். கவிஞரின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது கண்ணீர் கலந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வி. கே. கணேசன்,
மத்தியசிறை வேலூர்.

நியாயவிலைக் கடை வேண்டும்

ஐயா,

மதுரை மாவட்டம் நிலக்கோட்டைதாலூகா பன்னைப்பட்டி 6 ஆயிரம் மக்கட்தொகையைக் கொண்ட கிராமம். சுற்றுப்புற கிராமங்களில் 5 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். பருவ மழைக் குறைவால் சோளம் கேப்பை போன்ற தானியங்களின் விளைச்சல் குறைந்துவிட்டது. புளி, மிளகாய் போன்ற உபயோகப் பண்டங்களின் விலையும் உயர்ந்துவிட்டது. படி அரிசி ரூ. 1-2-0 முதல் ரூ. 1-5-0 வரை வருகிறது. கூலியும் ஆணுக்கு ஒரு ரூபாயாக இருந்தது 12 அணாவாகக் குறைந்துவிட்டது. பெண்ணுக்கு 8 அணாவாக இருந்தது 6 அணாவாகக்குறைந்துவிட்டது.

இங்கு நியாயவிலைக் கடை திறக்கவேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் தீர்மானம் போட்டும், தாசில்தாரிடம் மகஜர் கொடுத்தும் இன்னும் எவ்வித பலனும் ஏற்படவில்லை. எனவே அரசாங்கம் உடனடியாகக் கவனித்து பன்னைப்பட்டியில் ஒரு நியாயவிலைக் கடை ஏற்படுத்த வேண்டும்.

டாக்டர் பி. அருணாசலம்,
ஏ. ஆண்டிய கவுண்டர்,
கே. டி. முத்து.
மதுரை.

கைத்தறிக்கும் சலுகை அளிப்பீர்

ஐயா,

கதரின் உபயோகத்தை அதிகரிப்பதற்காக சர்க்கார் தங்கள் உத்திரவின் மூலம் (அரசாங்க ஆணை எண். சென்னை 323 தேதி 4-3-53) சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு சலுகையை அளித்தனர். அந்தச் சலுகையாவது, சர்க்கார் நிர்வாகத்திலுள்ள கதர்க் கடைகளில் துணி வாங்கினால் அந்தத் துணியின் கிரயத்தை 6 தவணைகளில் செலுத்தலாம் என்பதுதான். இதற்காக சம்பந்தப்பட்ட கடைக்கு ஊழியரின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்வதற்காக ஒரு ஒப்பந்த பத்திரம் ஊழியரின் அதிகாரியிடமிருந்து வாங்கப்படுகிறது. மேற்படி சலுகையை கைத்தறி துணிக்கும் அளித்தால் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு பண்டகசாலைகளிலிருந்து துணிகள் வாங்கிக் கொள்வதற்கு சௌகரியமாயிருக்கும். கைத்தறி நெசவாளரின் கஷ்டத்தைப் போக்க இந்த முயற்சி நல்ல பலன் அளிப்பதுடன் சர்க்கார் ஊழியருக்கும் மற்றும் நகரசபை சிப்பந்திகளுக்கும், ஆசிரியர்களுக்கும் சௌகரியமாயிருக்கும். கைத்தறி நெசவாளரின் நலனில் சர்க்கார் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் உடனே இந்தச் சலுகையை சர்க்கார் ஊழியர்களுக்கு அளிக்க வேண்டும். இந்த மாதம் தீபாவளி மாதமாகயிருப்பதால் சர்க்கார் உடனடியாக உத்திரவு போட்டால் நலமாகயிருக்கும்.

ஓர் நெசவாளர் அனுதாபி,
ஸ்ரீரங்கம்.

மாநில கல்வி இலாகா கவனிக்குமா?

ஐயா,

மதுரை மாவட்டம் சோழவந்தான் பிர்க்கா பள்ளி டிப்டி இன்ஸ்பெக்டர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடம் "சிலபஸ்" புத்தகம் என்னிடம்தான் வாங்க வேண்டும், வேறு கடைகளில் வாங்கக் கூடாது என்று கூறுகிறாராம். ஆனால் மதுரை புது மண்டபத்திலுள்ள கடைகளில் 'சிலபஸ்' புத்தகத்தின் விலை 9 அணாதான். இவர் ஒரு சில ஆசிரியர்களின் தூண்டுதலின் பேரில் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்கிறார். இவ்வாறு ஆரம்ப ஆசிரியர்களை மேற்படி அதிகாரி நிர்ப்பந்தப்படுத்தாமல் இருக்க மாநில கல்வி அதிகாரியையும், மாநில அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறோம்.

எஸ். சுப்பிரமணியன்,
உறுப்பினர், ஊராட்சி மன்றம், சோழவந்தான்.

உணவு சூதாடிகளைப்பிடி, விடாதே; படி அரிசி 12 அணாவிற்கு கொடு

கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்க பல்லடம் கிளை கட்டடத்திறப்பு விழா

பல்லடம், அக். 12—

கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்க, பல்லடம் கிளைச் சங்கக் கட்டிடத் திறப்பு விழா 10-10-59-ல் நடைபெற்றது. ஜில்லா சங்கத் தலைவர் தோழர் என். கே. ரெங்கன் சங்கக் கொடியை ஏற்றிவைத்தார். பொதுக்காரியதரிசி தோழர் கே. என். ராமசாமி சங்கக் கட்டிடத்தைத் திறந்து வைத்து சங்க வளர்ச்சி, தொழிலாளர் ஒற்றுமை பற்றி பேசினர். தோழர் பி. கே. செங்கோடன் வரவு-செலவு கணக்கைச் சமர்ப்பித்தார்.

பின்னரும் தோழர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் தலைவர் கே. கருப்ப கவுண்டர்; காரியதரிசி என். கந்தசாமி; உறுப்பினர்கள் பி. என். பெருமாள்சாமி, ஆறுமுகம், பி. ஆனந்தசாமி.

கொள்முதல் செய்யாமல் டெல்லியைக் காட்டுகிறீர்களே ஏன்?

உறுதியான போராட்டத்தின் மூலமே உணவு விலையைக் குறைக்க முடியும்

குடந்தைக் கூட்டத்தில் ஜீவா சொற்பொழிவு

குடந்தை, அக். 14—

அக்டோபர் 11-ந்தேதி மாலை குடந்தை நகரக் கிளை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கிளைக் காரியதரிசி தோழர் வி குருசாமி தலைமையில் மூர்த்தி கலை அரங்கில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 8000-த்துக்கும் அதிகமான பேர்கள் கூடியிருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் தஞ்சை ஜில்லா கவுன்சில் செயற்குழு உறுப்பினர் தோழர் வி ராமசாமி இந்தியா, சீன திபெத், கேரளா ஆகிய விஷயங்கள் பற்றி பேசினர். பின்னர் குடந்தை தாலுகா காரியதரிசி தோழர் ஏ. எம். கோவிந்தராஜன் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரபித்தார்.

'தஞ்சை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சிக் கவுன்சில் உறுப்பினரும், மன்னை தாலுகா விவசாய சங்கக் காரியதரிசியும், மன்னை நகர சபை உறுப்பினருமான தோழர் இலரா அண்மையில் கார் விபத்தில் அகால மரணமடைந்தது குறித்தும், பிரபல திரைப்படக் கவிஞரும், மூற்போக்குக் கவிஞருமான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் காலமானது குறித்தும் இக்கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னார்கள் குடும்பங்களுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது:

அகாதமாக அரிசி விலை ஏறிவிட்டதைக்காண இக்கூட்டம் நல்ல ரக அரிசியாக வார்டு தோறும் நியாய விலைக் கடைகள் திறந்து விநியோகிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமாய் இக்கூட்டம் கோருகிறது.

நிர்ணய விலையான ரூ 1.61-க்கு விசை சர்க்கரை கிடைப்பதில் பெருத்த கஷ்டமேற்பட்டிருப்பதால் சேமித்து வைக்கப்பட்டுள்ள இருப்புகளை சாதாரண ஜனங்களுக்கும் சௌகரியமாகக் கிடைக்கும்படி விநியோக ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் முன்வர வேண்டுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வரியைக் குறைக்க

நகரின் பஸ் விடப்பட்ட பிறகு நகரத்திலுள்ள வண்டியோட்டும் தொழிலாளிகளின் வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதை உத்தேசித்து, வண்டி வரி வருடத்திற்கு ரூ 18-ஆக இருப்பதை பாதியாகவாவது குறைக்க நகர சபை முன்வர வேண்டுமென்றும், இதனால் நகர சபைக்கு ஏற்படும் நஷ்டத்தை மோட்டார் வரி இனத்தில் அதிக வருவாயாகக் கிடைக்கும் தொகையிலிருந்து சர்க்கார் ஈடு கொடுத்து உதவ முன்வர வேண்டுமென்றும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஜீவா பேச்சு

மேற்படி தீர்மானங்கள் நிறைவேறியபின்—இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 'தேசியக் கவுன்சில் உறுப்பினரும், 'ஜனசக்தி' ஆசிரியருமான தோழர் ஜீவா பேசினர். ஜீவாவுக்கு கட்சியின் பல கிளைகள் சார்பாகவும், விவசாய தொழிற் சங்கங்கள் சார்பாகவும், பல பொதுஸ்தாபனங்கள் சார்பாகவும் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் ஜீவா பேசியதன் சாரம் பின்வருமாறு:

உணவுப் பிரச்சினை இன்று நாம் கவனிக்க வேண்டிய அவசரப் பிரச்சினையாக, உடனடித் தீர்வு காணவேண்டிய ஆகப் பிரதானப் பிரச்சினையாக உள்ளது. குற்றாலத்தில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கவுன்ஸில் கூட்டத்தில் உணவுப் பிரச்சினைபற்றி என்ன செய்யவேண்டும் என்று ஆலோசித்து முடிவெடுத்திருக்கிறது. 12 வருட காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் நிலைமை மிகமிக இக்கட்டானதாக இருக்கிறது. இது விஷயத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும், வாயும் வயிறும் உள்ள எல்லோரும் (கரகோஷம்) ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். திருவள்ளுவர் ஒரு நாடு எப்படி இருக்க வேண்டுமென்று சொல்லவந்தபோது, பசிப்பிணி இருக்கக் கூடாது—நாடு செழிப்பாக இருக்கவேண்டும் என்று கூறுகிறார். ஒளவையார் சொன்னபடி "சோழ வளநாடு சோறுடைத்து" புறநானூறு ஒரு யானை படுத்திருக்கக்கூடிய இடத்தில் ஒன்பது யானைகள் சாப்பிடக் கூடிய தானியம் விளையும் என்று கூறுகிறது தஞ்சை ஜில்லாவில் நெல் விளைச்சல் அதிகம்.

வயிறு காயுது

இங்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடியதுபோல 'தேனாறு பாயுது! செங்கதிரும் சாயுது! ஆனாலும் வயிறு காயுது' (கரகோஷம், சிரிப்பு) சீனக்காரன் ஆக்கிரமிப்பு என்று விண்ணுக்கும் மண்ணுக்கும் குதிக்கிறார்கள் இதில் எவ்வளவு பேர் செத்தார்கள். ஒரு எறும்பு கூட கிடையாது ஆனால் உணவுக்காக மேற்கு வங்கத்தில் போராடியதற்காக காங்கிரஸ் ஆட்சியால் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் (வெட்கம் வெட்கம்) நாட்டில் உணவு உற்பத்தி அதிகம் உற்பத்தி அதிகமானால் உணவு தட்டு இருக்க முடியாது. ஆயினும் கொள்முதல் செய்யமுடியாத—இல்லை விருப்பமில்லாத உணவு மந்திரி பக்தவத்சலம் நமக்கு டெல்லியைக் காட்டுகிறார். டெல்லி அமெரிக்காவைக் காட்டுகிறது (கரகோஷம்), தமிழ் நாட்டில் உணவு உற்பத்தி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கிறதென்று சர்க்கார் சொல்லும்போதே மறுபுறத்தில் நியாயவிலைக் கடைகளில் மக்களுக்கு உணவு கிடைக்காவிருக்கும் படுமோசமான நிலைமை உள்ளது என்றும், சென்னை சர்க்கார் குறைவான விலையில் கொள்முதல் செய்யப் போவதில்லை என்று தெரிவித்திருப்பதை அவர் கண்டித்தார்.

போராடினால்தான் நமக்குப் பின் 2 வருடம் ... குறைந்த விலைக்கு 10 லட்சம் டன் அரிசி நமக்கு சீனா கொடுத்ததையும், விளக்கமாக கூறினார். பொறுப்பில்லாத காங்கிரஸ் சர்க்காரின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியும், அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்குமென்பதையும் சுட்டிக் காட்டி, சோறு கிடைக்காமல் சாவதை விட, சோறு கிடைக்கப் போராடிச் சாவோம்— கொள்முதல் செய்ய மறுக்கும் சர்க்காரை கொள்முதல் செய்யவைப்போம் படி 12 அணாவிற்குகொடுக்கவைப்போம் இதற்காகஎல்லாமக்களும் கட்சி வேறுபாடின்றி அணிதிரள வேண்டும்; உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மிகப்பெரும் போராட்டம் நடத்தியாக வேண்டும். இதற்காக கம்யூனிஸ்ட் கட்சி பரிபூரணமாக முழு பலத்துடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. இப்பிரச்சினையில் எல்லோரும் ஒன்றுபட்டு போராட எல்லா இயக்கத்தாரையும் கம்யூனிஸ்ட் கட்சி அழைக்கிறது என்று தெரிவித்தார்.

நியாய விலைகடை திற

பூலத்தூரில் விவசாய சங்கக் கூட்டம்

வத்தலகுண்டு, அக். 14—

பூலத்தூர் மலைவாழ் மக்களின் விவசாய சங்கப் பொதுக் கூட்டம் தோழர் ஆர். என். பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. மதுரை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் தோழர் ஏ. பாலசுப்பிரமணியம் இன்றைய அரசியல் நிலைமை விவசாயி உயர்வு, விவசாய சங்கம் கட்டி வளர்க்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் விரிவாக பேசினர். பின்னர் சொற்பொழிவு நிகழ்த்தி ஆர். மற்றும் ஆர். பிச்சை டி. பெருமாள் ஆகியோர் பேசினர்.

பூலத்தூருக்கு ஒரு நியாய விலைக்கடை வேண்டுமென்றும், தண்ணீர் வசதி, ரோடு வசதி வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (க. மி)

நெல்லை ஜில்லா பாங்கு சிப்பந்திகள் மகாநாடு

பாங்குகளை தேசீய உடைமையாக்குக

நெல்லை, அக் 12—

நெல்லை மாவட்ட பாங்கு சிப்பந்திகளின் ஐந்தாவது மாகாநாடு நெல்லை சங்கீத சபாவில் 27.9.59-ல், திரு. கே. எம். சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திரு ப. இராமசாமி மாகாநாட்டைத் திறந்து வைத்து இன்சூரன்ஸ் தொழிலைப்போல் பாங்குத் தொழிலையும் உடனடியாகத் தேசிய மயமாக்க வேண்டியது அவசியம்'' என்று குறிப்பிட்டார்.

நெல்லை மாவட்ட கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக தோழர் சோ சண்முகம் மாகாநாட்டை வாழ்த்தினர்: அவர் குறிப்பிட்டதாவது;'' பாங்கு சிப்பந்திகள் நிலை இன்று மத்திய நடுத்தர வகுப்பினரைப் போல் மிகவும் மோசமாக இருக்கிறது. கோரிக்கைகளைப் பெறப் போராடும்போது, விவசாயிகளின் நிலைமையைக் கவனிக்கும் போது பாங்கி சிப்பந்திகளின் நிலைமை எவ்வளவோ மேல் என்று கொண்டிச்சாக்கு கூறுகின்றனர். பாங்கி முதலாளிகளும் மந்திரிகளும் விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கையில், அதற்கேற்றாற் போல் எல்லோருடைய வருமானமும் கூடவேண்டியது அவசியம். பாங்கு சிப்பந்திகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி கே. டி. கே. தங்கமணியும் பிற கம்யூனிஸ்டுகளும்பார்லிமெண்டில் போராடியதை சிப்பந்திகள் அறிந்ததே. எனவே, சிப்பந்திகளின் கோரிக்கைகளுக்கு பேங்க் முதலாளிகளும் அரசாங்கமும் செவிசாய்க்காதிருந்தால் கடைசி ஆயுதமாகிய வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவளிக்கும் சிப்பந்திகள் சங்க ஒற்றுமையைப் பாதுகாப்பது அவர்களின் கடமை'' என்றார். தோழர் இஸ்மாயில் பி. சோ. கடையில் சார்பாகவும் திரு. சங்கரன் (ஆடிட்டர்) ஹோட்டல தொழிலாளர் சங்கம் சார்பாகவும் மாகாநாட்டை வாழ்த்தினர். பாங்கி சிப்பந்திகளான கே. வி. சுந்தரம், முத்துசுப்ரமணியம் ஆகியோர் கோரிக்கைகளின் அடிப்படையில் பேசினார்கள். சென்னை ராஜ்யபாங்கி சிப்பந்திகள் சங்கப் பொதுக்காரியதரிசி திரு. சம்பத்தும், மதுரை திரு சி. எஸ். ராமசாமியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். பின்னர் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் எஸ். நாராயணன், உபதலைவர் தி க. சிவசங்கரன், பொதுக்காரியதரிசி ஜி. சந்திரசேகரன், கூட்டுக் காரியதரிசிகள் கே. வி. சுந்தரம், என். ஏ ஆர். எம். அருணாசலம், டொக்கஷதார்: என். முத்துசுப்ரமணியன் மற்றும் பதினொரு உறுப்பினர் கொண்ட புதிய நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (1) பாங்கு சிப்பந்திகளின் கோரிக்கை சாசனம் பற்றியது. (2) முக்கூட்டு மாகாநாடு பற்றி (3) சங்க அங்கீகாரம்: ஒழுங்கு விதிகள் அங்கீகாரம் பற்றி, (4) பாங்குகளை தேச உடைமையாக்குவது பற்றி, (5) விலைவாசி உயர்வு பற்றி, (6) நேஷனல் கிரிண்ட்லேஸ் பாங்க் சிப்பந்திகள் போராட்டம் பற்றி (7) போனஸ் பற்றி, (8) கோவில்பட்டி சங்கரன் கோயில் பிரதேசங்களில் இருக்கும் சிப்பந்திகளுக்கு தண்ணீர் கஷ்டம் இருப்பதால் அலவன்ஸ் ரூ 20 கொடுப்பதுபற்றி

திரு எஸ். நாராயணன் வந்தனோபசாரம் கூறிய பிறகு தேநீர் விருந்துடன் மகாநாடு முடிவுற்றது.

இரவு 7 மணிக்கு நெல்லை சங்கீத சபாக் குழுவினர் "இலங்கை வேந்தன்" என்ற நாடகம் நடித்தனர்.

13 லட்சம் ஏக்கர் பூமி வெள்ளத்திலாழ்ந்தது

கல்கத்தா, அக். 14—

மேற்கு வங்காளத்தில் வெள்ளக் கொடுமையின் காரணமாக 13 லட்சத்து 38 ஆயிரம் ஏக்கர் நிலம் நீரிலாழ்ந்தது என்று சர்க்காருக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது இதன் விளைவாக 4 லட்சத்து 72 ஆயிரம் டன் அரிசி கிடைக்காமல் நஷ்டமேற்பட்டது.

அரசியல் கொலைகளை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்யவேண்டும்

தோழர்கள் கே. டி. கே. தங்கமணி பாலசுப்ரமணியம் எச்சரிக்கை

மதுரை, அக் 11—

பாரதியார் படிப்பகத்தின் 7வது ஆண்டு விழாவை ஒட்டி ஒப்புரை படித்துறை மைதானத்தில் எம். அலாவுதீன் எம். சி. தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் தோழர் எஸ். பி ஆண்டி எம். சி. விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்துப் பேசினர். பின்பு விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஓர் தீர்மானமும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய ஊழியரான தோழர் எம். ஏ. வெங்கடாசலம், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து தோழர் கே. டி. கே. தங்கமணி பேசுகையில், "பாரதியின் கனவு நனவாகிவிட்டது. பாரதியார் கூறியபடி சந்திர மண்டலத்து இயல் கண்டு மகிழ்வோம் என்று கூறியபடி சோவியத் விஞ்ஞானிகள் சந்திரனுக்கு ராக்கெட் அனுப்பி அதில் வெற்றி பெற்றுவிட்டனர். பாரதியின் கனவை நினைவாக்கினவர்கள் சோவியத் விஞ்ஞானிகளே" என்றார்.

வெங்கடாசலத்தின் மறைவு

"தோழர் எம். வெங்கடாசலம் அரசியல் குரோதத்தால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இதை மக்கள் அனுமதிக்கக்கூடாது. மக்கள் தொண்டனைக் கொலை செய்வதென்பது அக்ரமம், அநியாயம். இவை போன்ற அரசியல் கொலைகளை எதிர்த்து தமிழ்நாடு ரீதியில் பொதுமக்களும், தொழிலாள விவசாய மக்களும் பலத்த ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும். மூலை முடுக்குகளில் எல்லாம் இதன் எதிரொலிபாயவேண்டும். இன்றைக்கு காங்கிரசு அரசியல் படுகொலையில் இறங்கிவிட்டதா? என்ற மக்களின் கேள்விக்கு அரசாங்கம் பதில் கூறித்தானாக வேண்டும்" என்றார்.

மதவாதிகள் அரசியலில் தலையிடக் கூடாது

'மதவாதிகளும், சாதிப்பித்தர்களும் அரசியலில் தலையிடுவதால் பெரும் ஆபத்தும், கொலைகளும் ஏற்படுகிறது. இந்த இலங்கையில் மதம் தலையிட்டதால் பிரதமர் பண்டாரநாயகா படுகொலை செய்யப்பட்டுள்ளார். கேரளத்தில் மதவாதிகள் அரசியலில் இறங்கியதால் ஒரு ஆட்சியையே கவிழ்த்துவிட்டார்கள். ஈராக்கில் மதம் தலையிட்டதால் பிரதமர் காசிம் சுடப்பட்டிருக்கிறார் இமானுவல் கொலையும் இவ்வகையானதே. இப்படித் தொடர்ந்து பார்த்தால் மதங்களும், சாதிகளும் அரசியலில் இறங்குவதால் இவ்வித ஆபத்து ஏற்படுகிறது இதை மக்கள் முன்வந்து தடுக்கவேண்டும் பொது வாழ்வில் ஈடுபட்டு உழைக்கும் தலைவர்களைக் கொலை செய்வதென்பது மிகப் பெரிய குற்றம். இதை மக்கள் கண்டிக்கவேண்டும்.' என்றார்.

தொடர்ந்து பேசுகையில், சீன இந்திய நட்புறவு பற்றியும், ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சி செயல்களைக் கண்டித்தும், மக்கள் தங்கள் உணவுக்காகத் தொடர்ந்து போராடவேண்டுமென்றும், இந்திய-சீன விவகாரத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க சர்க்கார் முன்வராவிடில் தமிழ்நாடு ரீதியாக பலத்த ஆர்ப்பாட்டம் நடத்த மக்கள் முன்வர வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

கேரள நிலைமை

மேலும் தொடர்ந்து பேசுகையில் "கேரளாவில் முன்பு நடந்ததுபோல் தேர்தல் நடைபெற்றால் 126 ஸ்தானங்களில் 75 ஸ்தானங்களை நிச்சயம் கம்யூனிஸ்டுக் கட்சி பெறும் என்று இ. எம். எஸ் ஸும், கோவிந்த நாயரும் கூறியுள்ளார்கள் கேரளத்தில் உள்ள கன்னியா மாடத்திலுள்ள பாதிரிகள் 25 பேர்களை வைத்துக்கொண்டு 250 பேர் என ஓட்டர் ஜாபிதாவில் சேர்ப்பதும் 10, 12 வயது பெண்களை 21 வயது எனப் பதிவு செய்வதும் ஆகிய இப்படிப்பட்ட கள்ளத்தனமான ஓட்டர் ஜாபிதா தயாரிப்பதில் கிறிஸ்தவப் பாதிரிகள் இறங்கியுள்ளனர் மேலும் கிராமத்திலிருக்கும் ஏழை விவசாயிகளை கூலி வேலை செய்து பிழைக்க விடாமல் விரட்டுவது, மிரட்டுவது என்பன போன்றவை நடைபெற்று வருகிறது. இத்தனை இடையூறுகளுக்கும் மத்தியிலும் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது அசையாத நம்பிக்கையும், உறுதியும் கொண்டுள்ளனர்

கம்யூனிஸ்ட் கட்சியை எவ்வித திட்டத்தாலும் ஒழிக்க முடியாது. இன்று உலக முழுவதிலும் பரவி ஜாம், ஜாம் என முன்னேறி வருகிறது. சூழ்ச்சிகளாலோ தில்லுமல்லுப் பிரச்சாரத்தாலோ, பலாத்காரத்தாலோ ஒழிக்க நினைப்பது மடமை. நினைக்க நினைக்க மேலும், மேலும் வளர்ந்துகொண்டு உலக தொழிலாள வர்க்கம் என்ற எண்ணத்தைப் பரப்பி வருகிறது'' என்று கூறி முடித்தார்.

ஏ. பாலசுப்ரமணியம்

இறுதியாக தோழர் ஏ. பாலசுப்ரமணியம் பேசுகையில், இந்திய-சீன எல்லை விவகாரத்தை விளக்கினர். விலைவாசி உயர்வுக்கான காரணத்தையும் கண்டித்தும், ஆசியாவின் இருகண்கள் இந்தியாவும், சீனாவுமே, பல்லாயிரக்கணக்கான வருடங்களாக வளர்த்துவந்த நட்பை வளர்க்க வேண்டுமென்றும் இவ்விருநாடுகள் ஒன்றுபட்டால் ஏகாதிபத்தியத்திற்குகிலி பிடித்துவிடுமென்றும், பத்திரிகைகளின் புளுகு பிரச்சாரத்தையும் கண்டித்துப் பேசினர்.

குலாலர் சங்க 3-வது ஆண்டு விழா

கும்பகோணம் அக் 6—

2-10-59 வெள்ளிக் கிழமை அணவை அக்ரகாரத்தில் குலாலர் சங்க 3-வது ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவர் சதானந்தம் தலைமை வகித்தார். வீரப்பன், டி. வி. எஸ் பணி, ஏ. எம். கோவிந்தராஜன் ஆகியோர் மண்பாண்டத் தொழிலாளர் நிலை பற்றியும், அரசாங்கம் உதவி செய்யவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திப் பேசினார்கள். கூட்டத்தில் சர்க்கார் இந்தத் தொழிலுக்கு உதவி செய்யவேண்டுமென்று கோரும் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நடப்பு ஆண்டிற்கு ரெத்தினசாமி தலைவராகவும், மருதமுத்து காரியதரிசியாகவும், எஸ். குருசாமி உப-தலைவராகவும், பெரியண்ணன் உப-காரியதரிசியாகவும், மூக்கன் நிதிக்காப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

காரியதரிசி நன்றி கூறக் கூட்டம் முடிவடைந்தது.

கவிஞர் மேல் இரங்கற்பாக்கள்

சென்னை, அக் 14—

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணம் மறைவு குறித்து பல இரங்கற் பாக்களும் மன்றங்களிலிருந்து அனுதாபத் தீர்மானங்களும் நமக்கு வந்தவண்ணமிருக்கின்றன. அவற்றைக் கீழே தருகிறோம்.

கவிஞர்கள்

ஜீவாதாசன், ராசன், திருச்சி பி கே. பி சாமி பெத்தநாயக்கன் பாளையம் கரிகாலன், கவிஞர் சடையப்பன், சாந்தா மணாளன் இராயப்பேட்டை சோமசுந்தரம் இலுப்பப்பட்டு முத்து அரங்கசாமி தர்மபுரி, பாண்டுரங்கன் கரூர், எம். ஜி. ராஜன் திருவையாறு, டி. என். சுப்பையா கரூர், து. அரங்கசாமி கோலார், வே. தி. மலையன் நுங்கம்பாக்கம்.

மன்றங்கள்

நண்பன் நாடக மன்றம் தாராபுரம், சிவாஜி கணேசன் மன்றம் மதுரை, கலைவாணர் மன்றம் கோவை, கே. டி. கே. தங்கமணி படிப்பகம் சிவகாசி, பொது நல ஊழியர் மன்றம் திருச்சிராப்பள்ளி.

கட்சிக் கிளைகள்

கம்யூனிஸ்ட் கட்சி உத்தமபாளையம், கம்யூனிஸ்ட் கட்சி வாடியக்காடு

மதுரை நகர் தபால்-தந்தி ஊழியர் கூட்டம்

கே. டி. கே. தங்கமணி பேச்சு

மதுரை, அக். 11—

தபால்-தந்தி ஊழியர்களின் (3-வது வகுப்பு) கூட்டம் மத்திய தபால்-தந்தி நிலயத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர் கே. டி. கே. தங்கமணி பேசுகையில், அரசியல் படுகொலைகள் ஏற்படுவதைக்கண்டித்து "இவ்விஷயத்தில் தொழிற்சங்கங்கள் திரண்டு நின்று தடுக்க போராட வேண்டும். அரசியல் தொந்தரவுகள் கொலைகளில் போய் முடியும் அளவுக்கு வளரவிடக் கூடாது.

"சமீபத்தில் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற கொலைக்கு, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் எம். வெங்கடாசலம் குத்தப்பட்டு மரணமடைந்ததற்கும் அரசியல்தான் காரணம். இதுபோல் மதங்களும் அரசியலில் இறங்குவதால் பெரும் ஆபத்து விளைகிறது" என்றார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில், வருகிற 19-10-59-ந் தேதியில் தேக்கடியில் இந்திய அரசாங்கத்தோடு சென்னை அரசாங்க மந்திரிகளான திரு. இராமையா, கக்கன் ஆகியோர்கள் தமிழ்நாட்டிலுள்ள, மின்சாரம், நீர்ப்பாசனம் முதலிய நிலைமைகள் குறித்துக் கலந்து பேசுவார்கள். இதனால் நன்மை கிட்டுமென்றும், டெல்லியில் நடைபெற்றபின்பு இதுமாதிரி கூட்டத்தால் நன்மை பிறந்திருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசபக்தர்களான திரு வி கல்யாணசுந்தரனார், வ. உ. சிதம்பரனார், பாரதியார், வள்ளுவன், கம்பன், இளங்கோ ஆகியோர்களின் உருவப்படங்களை தபால் தலைகளில் பொறிக்க வேண்டுமென்று மந்திரி சுப்பராயனிடம் தான் கூறியதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்து திரு. இராமையா பேசுகையில், தபால்-தந்தி ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததும் 4 ஆண்டுகளாகியும் செய்யாதிருப்பது வருந்தத்தக்கது என்றும் மந்திரிகளிடம் தெரிவித்தும், மகஜர்கள் அனுப்பியும் இன்னும் கட்டிக்கொடுக்கவில்லை யென்றும் குறிப்பிட்டார்.

சங்கச் செயலாளர் சீனிவாசன் வரவேற்றார். திரு. சுந்தரம் நன்றி கூறினர்.

இந்தியாவில் பிரிட்டிஷ் அமெரிக்க மூலதனம்

லாஸ் ஏஞ்சலஸ், அக். 14—

இந்தியாவில்பிரிட்டனே அதிக மூலதனம் போட்டுள்ள விதேச நாடு. பிரிட்டன் 70 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது. அமெரிக்கா 68 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது என்று நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் கூறினர்.

செந்தமிழின் சுவை நுகர சோவியத் பேராசிரியர் ஆர்வம்

நள்ளிரவு வரை காத்திருந்து இலங்கைத் தமிழரை சந்தித்தார்

இலங்கை தமிழ் எம். பி., ரஷ்யாவில் கண்ட அற்புதம்

கொழும்பு, அக். 14—

சோவியத் ரஷ்யாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான லெனின்கிராட் மாநகரத்தில் தமிழ் மொழி வளர்கிறது; வளர்க்கப்படுகிறது என்று சொன்னால் எந்தத் தமிழன்தான் பெருமைப்படாதிருக்க முடியும்?

லெனின்கிராட் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்கென ஒரு பிரிவு உண்டென்றும் இங்கு தமிழ் மொழிக்கு ஒரு தனிப்பீடம் கொடுத்து அது அங்கே போதிக்கப்படுகிறதென்றும் பிறந்த தமிழ் பேராசிரியராக விளங்கும் திரு. எம். ஆ. ருடின் என்ற ரஷ்யர் தம்மிடம் தெரிவித்தபோது தாம் பிரமித்துப்போனதாகவும், மகிழ்ச்சியினால் பூரித்துப் போனதாகவும் இலங்கை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா கொழும்பு சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில் தான் லெனின்கிராட் மாநகரத்தில் பேராசிரியர் ருடினை அவர் சந்தித்தார்.

அர்த்த இராத்திரியில் காத்திருந்தவர்

லெனின்கிராடிலுள்ள மிகப் பெரிய ஹோட்டல் ஒன்றில் நான் தங்கியிருந்தேன். ஒருநாள் வெளியில் சென்றுவிட்டு இரவு பதினோரு மணிக்குமேல் திரும்பினேன் என்னுடைய அறைக்குச் சென்று ஆடைகளை மாற்றிக் கொண்டிருந்த நேரத்திலே ஹோட்டல் சிப்பந்தி என்னிடம் வந்து என்னைச் சந்திப்பதற்காக ஒருவர் நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

என்னைச் சந்திப்பதற்கு அவ்வளவு அக்கறையோடு அர்த்த இராத்திரிவரை காத்திருக்கும் அந்த அதிசய மனிதர் யார்? என்ற ஆவலோடு நான் அவரைப் பார்க்க கீழே இறங்கி வந்தேன்.

தமிழில் வணக்கம் தெரிவித்தார்

நல்ல தோற்றம். அறிவொழுகும் உருண்ட முகம். மேல் நாட்டுடை, கையில் ஓவர் கோட்—இப்படியாக ரஷ்ய நாட்டவர் ஒருவர் காணப்பட்டார். என்னைக் கண்டதும் அவர் எழுந்து நின்று இரு கரங்களையும் கூப்பி இனிமை சொட்டும் குரலில் அடக்கமும் மரியாதையும் ததும்ப 'வணக்கம் ஐயா' என்று தமிழிலே கூறியபோது நான் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனேன்.

ஒரு கணம் தாமதித்துத்தான் எனக்கு உணர்வு ஏற்பட்டது. இரு கரங்களையும் கூப்பி நானும் வணக்கம் தெரிவித்துவிட்டு உட்காருங்கள்' நீங்கள் யார் கேட்டேன்.

அதற்கு அவர் 'நான் ஓர் ரஷ்யன். என் பெயர் செம்பியன் என்றார்.

'என்ன சொன்னீர்கள்? உங்கள் பெயர் செம்பியனா? சுத்தத் தமிழ்ப் பெயர்போல் அல்லவோ இருக்கிறது' என்றேன் நான்.

ரஷ்யர்களுக்கு தமிழ்ப் பெயர்கள்

அதற்கு அவர், 'என் பெயர் ருடின் என்பது அதைத் தமிழாக்கி செம்பியன் என்று வைத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப்போல் தமிழ் பயின்ற ருஷியர்கள் எல்லாரும் தங்கள் பெயரைத் தமிழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். என் உதவியாளர் ஒருவர் கிளாஷோவ் என்பவர் தமது பெயரை தமிழில் கண்ணன் என்று மாற்றிக் கொண்டிருக்கிறார்' என்று கூறினர்.

எல்லாம் எனக்கு ஒரே அதிசயமாக இருந்தது. 'திரு. செம்பியன் அவர்களே நீங்கள் உங்கள் உதவியாளரைப் பற்றிக் கூறுகிறீர்கள்? நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்? எதற்காக வந்தீர்கள் என்பனவற்றை இன்னும் கூறவில்லையே' என்றேன் நான்.

திரு. ருடின்: ஐயா நான் லெனின் கிராட் பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றுகிறேன் அங்கு தமிழ் விரிவுரையாளராக தென் இந்தியாவைச்சேர்ந்ததிருவாட்டி ஆதிலட்சுமி அம்மையார் என்ற ஒருவர்பணியாற்றுகின்றார் ஐந்து ரஷ்ய மாணவர்கள் எங்களிடம் தமிழ்ப் பயிலுகின்றார்கள். இங்கு தமிழ் பணி புரிவதற்காக வந்திருக்கும் திரு கிருஷ்ணமூர்த்தி என்பவர் மூலம் தாங்கள் ஒரு இலங்கைத் தமிழர் இங்கு வந்திருப்பதை அறிந்து தங்களைக் கண்டு பேச ஆவலோடு வந்திருக்கிறேன்.

வட இலங்கையில் எழுத்து நடையில், சுத்தமான தமிழ் பேசப்படுகிறது என்று கேள்விப்படுகிறோம். எனவே தங்களோடு தமிழில் பேசி தமிழின் இனிமையை நுகர விருப்பம் கொண்டுள்ளேன். தயது செய்து தமிழிலேயே பேசுங்கள். இந்த அகாலநேரத்தில் நான் தங்களைக் காணவந்ததை மன்னிக்க வேண்டும். நாளை தாங்கள் இங்கிருந்து போய்விடுவீர்கள் என்பதை அறிந்ததால் இந்த நேரம் வரை காத்திருந்தேன்.

திரு. வி. ஏ. கந்தையா.—என் தாய் நாட்டில் இருந்து இத்தனை மைல் தூரம் இப்பால் வந்த பிறகும் செங்கொடி பறக்கும் ரஷ்ய நாட்டிலே செந்தமிழின் மங்கள ஓசையைக் கேட்கும் போது நான் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். உங்களைப் போன்ற ஒருவருடன் அகாலத்தில் மட்டுமல்ல, அர்த்த இராத்திரியில் மட்டுமல்ல, அதற்கப்பாலும் வைகறையின் செங்கதிர் தோன்றும் வரை பேசிக்கொண்டிருக்க நான் ஆயத்தமாய் இருக்கிறேன். தமிழ் முழக்கத்தைக் கேட்டதும் என் பசியெல்லாம் பறந்துவிட்டது. களைப்பெல்லாம் கலைந்துவிட்டது.

திருச்சி மாவட்ட உணவு இயக்கப் பொதுக்கூட்டங்கள்

திருச்சி நகரம்

17-10-59	பஜார்	எஸ். ஏ. தங்கராஜ்
18-10-59	சிந்தாமணி	கே. டி. ராஜு
19-10-59	வரகனேரி	கே டி ராஜு
20-10-59	பீம நகர்	உமாநாத்
22-10-59	டவுன் ஹால்	ராமமூர்த்தி, ஜீவா
23-10-59	ஸ்ரீரங்கம்	கே. ஏ. நம்பியார்
24-10-59	முதலியார் சத்திரம்	கே. ஏ. நம்பியார்
25-10-59	உறையூர்	அணிவகுப்பு—கே. ஏ. நம்பியார்

கரூர் தாலூகா

17-10-59	கள்ளிப்பாளையம்	பாப்பா, சுந்தரி
21-10-59	கரூர் நகரம் (அணிவகுப்பு)	பி. ராமமூர்த்தி
22-10-59	தண்ணீர் பந்தல்	பசுபதி, வி. நாகு
23-10-59	வெள்ளி அணை	பசுபதி, சேரமு
24-10-59	மண்மங்கலம்	கே. ரமணி

புதுக்கோட்டை வட்டம்

17-10-59	நார்த்தாமலை	ஜி ஜி ராஜன், சக்ரபாணி
18-10-59	இலுப்பூர்	வி. நாகு, சையூம்
20-10-59	அன்டகுளம்	பாப்பா, சுந்தரி
20-10-59	புதுக்கோட்டை (அணிவகுப்பு)	பி ராமமூர்த்தி
22-10-59	கீரனூர்	மணலி கந்தசாமி
23-10-59	பொன்னமராவதி (அணிவகுப்பு)	கே. ரமணி

குளித்தலை வட்டம்

20-10-59	தண்ணீர்பள்ளி	வி. நாகு
21-10-59	பஞ்சப்பட்டி	வி. நாகு
25-10-59	குளித்தலை (அணிவகுப்பு)	கே டி. கே. தங்கமணி

மணப்பாறை வட்டம்

17-10-59	புதிப்பட்டி	வி நாகு
19-10-59	முச்சந்தி	பாப்பா, சுந்தரி
20-10-59	பன்னாங்கொம்பு	கே. டி. ராஜு
21-10-59	மணப்பாறை	உமாநாத்
24-10-59	,,	கே. டி. கே.

லால்குடி வட்டம்

18-10-59	டால்மியாபுரம்	கே. ஏ நம்பியார்
18-10-59	பின்னவாசல்	பாப்பா, சுந்தரி
19-10-59	அரியூர்	சக்ரபாணி, ஜி ஜி ராஜன்
21-10-59	லால்குடி (அணிவகுப்பு)	மணலி கந்தசாமி
24-10-59	கூத்தூர்	கே. பி. எஸ் கோன், சையூம்
25-10-59	இனியகல்லூர்	வி நாகு, பசுபதி

முசிறி வட்டம்

21-10-59	தொட்டியம்	கே டி. ராஜு
23-10-59	அய்யம்பாளையம்	மணலி கந்தசாமி
30-10-59	பொன்மலையின்	தோழர் சுந்தரய்யா ...

பஞ்சை மனிதர் வாழ புஞ்சை தானியம் ரூபாய்க்கு படி [illegible]று கொடு

தோல்விகளை மறைக்கவே கெடுபிடி யுத்தம்

மஹாராஷ்டிர ராஜ்யம் அமைத்திடும்வரை போராட்டமே

சமிதியின் நிலை; கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

பம்பாய், அக். 14—

கம்யூனிஸ்ட் கட்சியின் மகாராஷ்டிர மாகாண கமிட்டியின் நிர்வாக கமிட்டிக் கூட்டம் இரண்டு நாட்கள் நடந்து இன்று முடிவடைந்தது.

சம்யுக்த மகாராஷ்டிர சமிதியின் பார்லிமெண்டரி போர்டு கடந்த வாரம் கூடி, பம்பாய் ராஜ்யப் பிரிவினையை வரவேற்றும் அரசியல் சட்டத்தின்படி தரப்பட்ட உத்தரவாதங்களையெல்லாம் இம்மியும் வழுவாமல் நிறைவேற்றுவதாக சிறுபான்மையோருக்கு உறுதிமொழிகூறியும் தீர்மானம் நிறைவேற்றியதையடுத்ததே. அம்முடிவை நிர்வாக கமிட்டி வரவேற்றது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அனைவரும் சமிதியை ஆதரித்து பிரசாரம் செய்வதுடன் அச் சமிதியின் கீழ் மக்களைத் திரட்டி மொழிவாரி அடிப்படையில் பிரிவினை ஏற்படும் வரையின் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்றும் நிர்வாகக் கமிட்டி ஆணையிட்டது.

ஆளும் கட்சியான காங்கிரசும் இதர எதிர்ப்பாளர்களும் சமிதியின் ஐக்கியத்தைக் குலைத்துவிட முயற்சித்தும் சமிதி தனது ஐக்கியத்தைக் காத்து வருவதை குறித்து நிர்வாக கமிட்டி திருப்தி தெரிவித்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மகாராஷ்டிர மாகாண கமிட்டியின் நிர்வாக கமிட்டி மேலும் கூறுவதாவது, "புதிய மகாராஷ்டிர ராஜ்யம் ஒரு நேர்மையான அடிப்படையில் சிருஷ்டிக்கப்படும் வரையில், சம்யுக்த மகாராஷ்டிரத்திற்காக நடத்தும் போராட்டமானது முடிவுறாது என்று சமிதி கருதுவதை இக்கமிட்டி பூரணமாக ஆதரிக்கிறது.

பி. சோ. தலைவர் போக்குக்கு ஆட்சேபம்

சமிதியின் பொதுச் செயலாளர் எஸ். எம். ஜோஷி என்ற பி. சோ. தலைவர் பிரதமர் நேருவைத் தனியாகச் சந்தித்து, அவருடன் சம்யுக்த மகாராஷ்டிரத்தில் ஒரு ராஜ்ய சர்க்கார் அமைக்கும் பிரச்சினையை விவாதித்ததை நிர்வாக கமிட்டி ஆட்சேபித்தது.

ராஜ்ய உணவு நிலவரம் குறித்து நிர்வாக கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. சரச விலை கடைகளைப் போதிய எண்ணிக்கையில் திறக்கும்படிக் கோரியும் அக்கடைகளுக்கு போதிய தானியம் சப்ளை செய்யும்படிக் கோரியும் இதர கட்சிகளுடன் ஒத்துழைத்து மகாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள் முதலியனவற்றை கட்சியின் ஜில்லா யூனிட்டுகள் நடத்தவேண்டுமென்று அத்தீர்மானம் வற்புறுத்தியது.

நிலமில்லாத விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை வழங்கும்படிக் கோரி கண்டேஷ், நாசிக், நாகர் முதலிய ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் நடத்தும் போராட்டத்திற்கும் நிர்வாக கமிட்டி ஆதரவு தெரிவித்தது. (பிடிஐ)

இன்றைய சினிமா

தமிழ்

காஸினோ — ராஜ சேவை
பாரத் — ராஜ சேவை
சயானி — ராஜசேவை
கெயிட்டி — ஓடி விளையாடு பாப்பா
காமதேனு — மோஹினி
மஹாராணி — முதலாளி
ராக்ஸி — ஓடி விளையாடு பாப்பா
சித்ரா — வீரபாண்டிய கட்டபொம்மன்
கிரௌன் - வீரபாண்டிய கட்டபொம்மன்
பாரகன் — காவேரியின் கணவன்
பிரபாத் — ,,
வெலிங்டன் — மரகதம்
ஸ்ரீ கிருஷ்ணா — மரகதம்
உமா — மரகதம்
தங்கம் -வாழவைத்த தெய்வம்
மஹாலக்ஷ்மி—கல்யாணப் பரிசு
சன் — கல்யாணப் பரிசு
பிரைட்டன் - வாழவைத்த தெய்வம்
கபாலி — தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை
வீனஸ் — தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை
திருமகள் — நளதமயந்தி
ஜனதா — உலகம் சிரிக்கிறது
லக்ஷ்மி — வீரபாண்டிய கட்டபொம்மன்
ராஜகுமாரி — அபூர்வ சகோதரர்கள்
சரஸ்வதி—சக்ரவர்த்தி திருமகள்

ஹிந்தி

மிட்லண்ட் — நவ்ரங்
பிராட்வே — நவ்ரங்
ஸ்டார் — காகஸ்-கா-பூல்
பிளாஸா — கைதி நெ. 911
பத்மனாபா — சந்தான்
செலக்ட் — ஷராரத்
அசோக் — பாய் பெஹன்
ஈராஸ் — ஜிப்போ

ஆங்கிலம்

ஓடியன் — Witness for the Prosecution
நியூ க்ளோப்—Hercules
நியூஎல்பின்ஸ்டன் — Rio Bravo
மினர்வா — Green Mansions

★

தாம்பரம் G.R. தியேட்டர்ஸ் நான் சொல்லும் ரகசியம்

★

அரக்கோணம் கற்பகம் — வாழவைத்த தெய்வம்

ஏகாதிபத்திய கிழட்டுக் குதிரைகள் எந்த சமயத்திலும் இடறி விழும்

யுத்த வெறியர்களைக் கண்டித்து குருஷ்சேவ் பேச்சு

மாஸ்கோ, அக். 13—

"நான் அமெரிக்காவுக்குச் சென்று வந்ததினால் ஏற்பட்ட சாதகமான நற்பலன்களைக் குறைத்துக் காட்ட சில பிற்போக்காளர்கள் பெரிதும் முயற்சிக்கிறார்கள்" என்று சைபீரியாவில் ஒரு இன்ஜினீயரிங் தொழிற்சாலை தொழிலாளர் கூட்டத்தில் குருஷ்சேவ் பேசினார்.

"இன்று ஏகாதிபத்தியவாதிகள் கெடுபிடிப் போர் ஒழிவதைப் பற்றி பயப்படுகிறார்கள். சர்வதேச நெருக்கடி நீங்குவது பற்றியும் மிரளுகிறார்கள். இவர்களின் பயத்துக்குக் காரணம் என்ன? கெடுபிடிப்போர் நீடிப்பதால் தான் இவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆயுத தளவாடங்களை உற்பத்தி செய்யும் முதலாளிகளுக்கு, கெடுபிடிப்போர் ஒழிந்தால், கொள்ளை லாபம் கிடைக்காது. மிலிட்டரி ஆர்டர் கிடைக்காமல் போகுமே என்று அவர்கள் மிரளுகிறார்கள். அதனால்தான் சமாதானம் என்ற வார்த்தையே அவர்களுக்கு மரணபயம் ஏற்படுத்துகிறது.

யார் தலையிடுவது?

சோவியத் ரஷ்யா எல்லா நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுவதாக ஏகாதிபத்திய கைக்கூலிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின்சுரண்டல் கும்பலும் அவர்களது சர்க்கார்களும் செய்து வரும் சகல பாபங்களுக்கும் சோகச்சம்பவங்களுக்கும், ஏன் அமெரிக்காவில் நடைபெற்று வரும் வேலைநிறுத்தங்களுக்கும் கூட ரஷ்யா மீதே பழி போடுகிறார்கள்.

முதலாளிகளின் கஷ்டங்கள் முரண்பாடுகள் ஆகியவற்றிற்கான பொறுப்புகள் அனைத்தையும் கம்யூனிஸ்டுகள் மீது சுமத்தி முதலாளித்துவம் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. அது ஒன்றும் வெற்றி பெற முடியாது என்று உற்பத்தி சாதனங்கள்மீது தனி நபர்களுக்கு ஆதிக்கம் ஏற்பட்டதோ, என்று வர்க்கங்கள் தோன்றினவோ, அன்று முதலே உழைப்புக்கும் மூலதனத்துக்குமிடையே போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. அந்த வர்க்கப் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. வாழ்க்கையின் தேவைப் பொருள்களையெல்லாம் யார் உழைத்து உற்பத்தி செய்கிறார்களோ அவர்கள் முடிவான வெற்றி அடையும் வரையிலும் இந்தப் போராட்டம் நீடித்துக்கொண்டே யிருக்கும்.

கிழட்டுக் குதிரை

"உலகம் முழுவதும் கம்யூனிசம் வந்துதான் தீரும். ஏகாதிபத்ய வாதிகள் சவாரிசெய்யும் குதிரை ஏற்கனவே ஓடி ஓடி அலுத்துவிட்ட கிழட்டுக் குதிரை. இன்னும் அதன் மேலேயே சவாரி செய்தால் எந்தச் சமயத்திலும் எங்க இடத்திலும் கால் இடறிவிழுந்து செத்துப் போகும்; சவாரி செய்பவனுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

புதுக் குதிரை

ஆனால் சோஷலிஸ்டு நாடுகள் சவாரி செய்யும் குதிரை புதிய, வாலிபமான குதிரை, சவாரிக்கு தகுதியான குதிரை.

சந்திரனில் செங்கொடி

நமது சோஷலிஸ்ட் சமூகம் மிகவும் இளமைமிக்கது. எத்தனையோ ஆக்க சக்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகத்தை மீண்டும் மீண்டும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் அற்புத சக்திகள் இனிமேல்தான் வெளிவரப்போகிறது. இப்பொழுதுதான் ஆரம்பமாயிருக்கிறது. சந்திரனுக்கு அரிவாள் சுத்தி சின்னம் அனுப்பினோம். அதுவும் அன்புடனே வரவேற்றுக்கொண்டது.

செங்கொடியின் கீழ்தான்

"சோஷலிச சமுதாய அமைப்பின்தான் மனித குலத்துக்கு விமோசனம் ஏற்படும். வயிரார உணவும், வானத்தையளக்கும் விஞ்ஞான அறிவும் தலைமுறை தலைமுறையாக சமாதானமும், உண்மையான சுதந்திரமும், உண்மையான ஆத்ம திருப்தியும் ஏற்படும். இதை முதலாளித்துவ நாடுகளில் வசிக்கும் பாட்டாளி மக்களும் அறிவாளிகளும் நன்கு உணருகிறார்கள்.

ஏகாதிபத்திய உதவி

"பின்தங்கிய நாடுகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் ஏதோ பிரமாத உதவி செய்து வருவதாக தம்பட்டமடிக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தரும் உதவி என்ன? 'ஓ, கடவுளே! எங்களுக்கு எது எதெல்லாம் தேவையில்லையோ, அதையெல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்ளுவீராக!' என்ற முதுமொழிப்போல்தான், இவர்களது உதவிகளின் லட்சணம் இருக்கிறது.

"பின்தங்கிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் கொள்ளையடித்த சுரண்டியதில், சுளைகளையெல்லாம் தாமே எடுத்துக் கொண்டு, வெறும் தோல்களைத் தான் உதவி என்ற பேரால் பின்தங்கிய நாடுகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். சிறுமீனைப் போட்டு பெருமீனை இழுக்கும் கொள்கையே ஏகாதிபத்திய வாதிகளின் கொள்கை.

ரஷ்ய உறவு

"சோஷலிஸ்டு நாடுகளுக்கிடையே உள்ள உறவு சகோதர உறவு. பரஸ்பரம் முன்னேற பரஸ்பரம் உதவி செய்து ஒத்துழைக்கும் உறவு. அதேபோன்று சோவியத் யூனியன் இதர சமாதானம் விரும்பும் நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள உறவு கட்புறவு சமாதான சகவாழ்வு உறவு".

காலம் மாறிப்போச்சு

"நாம் சோஷலிஸப் பாதையில், கம்யூனிஸப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நம்முடன் சமாதான முறையில் பொருளாதாரப் போட்டி போட முடியாதவர்கள், யுத்த தயாரிப்புகளில் ஈடுபடுகிறார்கள்.

ஆனால், ஒரு விஷயம். நமது பாதையிலிருந்து நம்மைத் தடுத்து முதலாளித்துவப் பாதைக்கு அழைத்துச் செல்ல, ஏகாதிபத்தியவாதிகள் நமது விவகாரங்களில் தலையிடுவார்களேயானால், நிச்சயம் அவர்கள் அழிக்கப்பட்டு விடுவார்கள். நமது விவகாரங்களில் பிறர் தலையிடும் காலம் மலையேறிவிட்டது.

சோதிக்கவில்லை

"நம்மிடம் கூடுதல் சக்தி இருக்கிறது என்பதினால் முதலாளித்துவசக்தியைநாம்சோதித்துப் பார்க்க விரும்பவில்லை. சோஷலிஸ முறையை வலுக் கட்டாயமாக, பலாத்காரமாகத் திணிக்கக்கூடாது. பலாத்காரமாகத் திணிக்க வேண்டும் என்று பேசுகிறவர்களை மக்களால் புரிந்து கொள்ளவும் முடியாது. ஆதரிக்கவும் மாட்டார்கள். மார்க்ஸிஸம்-லெனினிஸம் இதைத்தான் போதிக்கிறது.

பஞ்சசீலமே வழி

"சமாதான சகவாழ்வுபற்றிய பஞ்சசீலக் கொள்கைகளை சிலர் வெறுக்கிறார்கள். கிண்டல் செய்கிறார்கள். பூர்ஷ்வா கட்சித் தலைவர்கள் பஞ்சசீலத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டால், வேறு எந்த சீலத்தை பின்பற்றுவார்கள்? சகவாழ்வு இல்லையேல் யுத்தம்தானே? இன்றைய உலக நிலைமையில்-தூரத்திலும், வேகத்திலும் குறியிலும் இம்மியும் தவறாத அளவுக்கு ராக்கெட் விடக்கூடிய சக்தியையும் 100 கோடி மக்களையும் உடைய நம்மிடம், யுத்த வெறியர்களின் பாச்சா பலிக்காது" என்று நீண்ட கரகோஷத்திற்கிடையே பேசி முடித்தார்.

—நவசீனச் செய்தி

நிறுத்திவைக்கப்பட்ட 1957-58 வருட போனஸ் கிடைத்தது

டாடா எஃகுத் தொழிலாளர் வெற்றி

ஜாம்ஷெட்பூர், அக் 8—

டாட்டா எஃகு தொழிற்சாலை ஊழியர் 200 பேர்கள் 1957-58 வருடத்தில் கொடுபடாமலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போனஸை பெறவேண்டுமென்று சம்பள பட்டுவாடா சட்டத்தின்படி கொடுக்கப்பட்டிருந்த வழக்கில் வெற்றிபெற்றனர். இவ்வூழியர்கள் சென்ற வருட மே மாதத்தில் நடைபெற்ற டாட்டா எஃகு தொழிற்சாலை தொழிலாளர்களின் போராட்டத்தின் காரணமாக வேலையிலிருந்து விலக்கப்பட்டவர்களாகும்.

இவ்வழக்கின் தீர்ப்பு அக்டோபர் 3-ம் தேதி சோட்டா நாக்பூர் டிவிஷன் தொழிற்கோர்ட்டு நீதிபதியால் அளிக்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்ப்பு கூறும்போது முக்கியமான சட்டப் பிரச்சினை நீதிபதியால் முடிவு செய்யப்பட்டது.

இலாபத்தில் பங்கு என்கிற அடிப்படையில் கொடுக்கப்படும் போனஸ் தொழிலாளர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுவது அல்ல. மாறாக வேலையின் ஒரு அம்சமாகும். இவ்வாறு தான் சம்பள பட்டுவாடாச் சட்டத்தில் 'சம்பளம்' என்ற பதத்தின் பொருள் கூறப்பட்டுள்ளது என்றார்.

சென்ற கால சேவையின் அடிப்படையில் கொடுப்பது தான் போனஸே தவிர ஒழுங்கீனம் என்கிற காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்படக்கூடியதொன்றல்ல. ஒழுங்கீனமாக நடந்தால் வருங்கால சம்பளமோ சம்பாத்தியமோதான் நிறுத்தி வைக்கப்படலாம் என்றும் நீதிபதி விளக்கியுள்ளார் (ஐபிஏ)

விசாரணையின்றி சிறை சிங்கப்பூர் சட்ட நீடிப்பு

சிங்கப்பூர், அக் 14—

பார்மோனல் தக்குதல் அல்லது அத்யாவசிய சர்வீஸ்களுக்கே அபாயம் என்ற காரணத்தில் யாரையும் விசாரணையின்றி சிறைபடுத்தும் சட்டத்தை ஐந்து ஆண்டுகள் நீடிக்க இன்று சிங்கப்பூர் சட்டசபை முடிவு செய்தது.

நேபாள விமானப் போக்குவரத்து தேசியமாக்கப்பட்டது

காத்தமண்டு, அக். 15—

நேபாளத்தில் விமானப் போக்குவரத்தை நடத்திவந்த ராயல் நேபாள் விமானக் கம்பெனியை சர்க்கார் தேசியமாக்கியுள்ளது.

1960 ஜனவரி 3-ல் கோரிக்கை தினம்

தமிழ்நாடு மோட்டார் தொழிலாளர் சம்மேளன மகாநாடு முடிவு

சென்னை அக் 14—

1960 ஜனவரி 3-ந் தேதியை தமிழ்நாடு பூராவிலும் மோட்டார் தொழிலாளர் கோரிக்கை தினமாகக் கொண்டாடுவது என்று அக். 2, 3, 4 தேதிகளில் பெரியகுளத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மோட்டார் தொழிலாளர் சம்மேளன 3-வது மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

அம்மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

1 1959 அக்டோபர் முதல் 1960 அக்டோபருக்குள் அங்கத்தினர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது.

2 அ. இ. சம்மேளனத்தையும் தமிழ்நாடு சம்மேளனத்தையும் பலப்படுத்த ஒவ்வொரு மோட்டார் தொழிலாளியும் 8 அணா விசேஷ நிதி செலுத்துவது.

3 1960 ஜனவரி 3-ந் தேதி தமிழ்நாடு பூராவும் கோரிக்கை தினம் கொண்டாடுவது.

கோரிக்கைகள்

1. மோட்டார் போக்குவரத்தை தேசவுடைமையாக்குக.

2 ஓட்டெடுப்பின் மூலம் சங்க அங்கீகாரம்.

3 தொழிற்சங்க ஊழியர்களைப் பழிவாங்குதலை எதிர்த்து.

4. 20 தொழிலாளிகளுள்ள கம்பெனிகளுக்கும் பிராவிடெண்ட் பண்ட் சட்டம் வேண்டும்.

5. சட்டரீதியான கிராஜுடி தரப்படவேண்டும்.

சர்வதேச ஹாக்கி போட்டியில் இந்தியா வெற்றி

மூனிக் அக் 14—

இன்று சர்வதேச ஹாக்கி போட்டியில் இந்தியா 3 கோல்கள் போட்டு ஹாலந்தை வென்றது.

இதர பந்தயத்தில் பிரிட்டனை மேற்கு ஜெர்மனி வென்றது.

சோவியத் ஆலோசனையை ஏற்க மறுப்பதேன்?

அமெரிக்க யுத்தவெறிக் கும்பலை மக்கள் சீன மந்திரி கண்டிக்கிறார்

பீகிங், அக். 16—

"அமெரிக்காவின் யுத்தவெறிக் கும்பல் இன்னும் சோவியத் யூனியனின் ஆயுதக் குறைப்பு கொள்கைக்கு தொடர்ந்து தீங்கிழைத்துக் கொண்டும் தாக்கிக் கொண்டும் வருகிறது" என்று மக்கள் சீனத்தின வெளிநாட்டுத் துறை அமைச்சர் மார்ஷெல் சென்யி பார்லிமெண்டரி போர்டின் நிரந்தர கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "அமெரிக்க அரசாங்கம் உண்மையிலேயே படைபலக் குறைப்பை விரும்புமானால், சோவியத் யூனியனின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளும். படைபலக் குறைப்புப் பாதையை நோக்கி நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். ஆனால் இன்றுவரை அமெரிக்க யுத்தவெறிக் கும்பல் தம்முடைய ஆக்கிரமிப்பு யுத்தவெறிக் கொள்கையை கைவிட்டுவிடவில்லை. இன்னும் கெடுபிடி யுத்த நிலையை உருவாக்குகிறது; யுத்தத் தயாரிப்புக்களை செய்து கொண்டிருக்கிறது. உலகம் முழுமையும் ராணுவ தளங்களை நிறுவிக்கொண்டுவருகிறது தைவானை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது; ஜப்பானுக்கு யுத்த சாதனங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேற்கு ஜெர்மனியை மேலும் மேலும் ஆயுதபாணியாக்குகிறது. குறிப்பாக லாவோஸ் அரசாங்கத்தைத் தூண்டிவிட்டு, ஜெனிவா ஒப்பந்தத்தை சீர்குலைக்கிறது; பியன்டைன் ஒப்பந்தத்தை மீறுகிறது லாவோசில் உள்நாட்டு யுத்தத்திற்கு தூபம் போடுகிறது" என்று கூறினார்.

சோவியத் உதவியுடன் மூன்று பெரும் தொழிற்சாலைகள்

திட்டத்தை இந்தியா அங்கீகரித்துவிட்டது

லண்டன்' அக். 15—

இந்தியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொதுத் துறையில் மூன்று தொழிற்சாலைகளைக் கட்டிக் கொடுக்க சோவியத் யூனியன் முன்வந்திருக்கிறது. இந்தச் செய்தியை நேற்று மாஸ்கோ வானொலி நிலையம் ஒலி பரப்பியது.

குறைந்த வட்டியில் கடன் உதவி

இந்தியாவில் சோவியத் யூனியன் கட்டவிருக்கும் மூன்று தொழிற்சாலைகளின் திட்டத்தை சோவியத் தொழில் வல்லுனர்களே தயாரித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளின் நிர்மாணப் பணிக்கான செலவையும் சோவியத் யூனியன் கடனுதவியாக, குறைந்த வட்டிக்கு, நீண்ட காலத் தவணைக்குக் கொடுத்து உதவும்.

சோவியத் யூனியன் கனரக என்ஜினீயரிங் தொழிற்சாலை, சுரங்கத் தொழில் சாதனங்கள் உற்பத்தி தொழிற்சாலை, மூக்குக் கண்ணாடி தொழிற்சாலை ஆகிய மூன்று தொழிற்சாலைகளையே சோவியத் யூனியன் கட்டிக் கொடுக்கும்.

காப்பிக் கொட்டை பஞ்சத்திற்கு வியாபாரிகளே காரணம்

காப்பி போர்டு தலைவர் குற்றச்சாட்டு

சென்னை, அக். 14—

சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் காப்பிக் கொட்டை பஞ்சத்திற்கு கொள்ளை லாப வியாபாரிகள்தான் காரணம் என்று காப்பி போர்டு தலைவர் திரு. டி. விஸ்வநாதன் இன்று கூறினார்.

காப்பி போர்டு விற்பனை நிலையத்தின் முன் சாரி சாரியாக மக்கள் வரிசையில் நின்று காப்பிக் கொட்டைக்கு தாளம் போடும் பரிதாபம் யாவருக்கும் தெரிந்ததே. திடீரென்று காப்பிக் கொட்டைக்கு வந்த பஞ்சம் பற்றி நமது நிருபர் திரு விஸ்வநாதனை பேட்டி கண்டபோது அவர் கூறியதாவது.

நியாயமில்லை

காப்பிக் கொட்டை பஞ்சம் ஏற்பட காரணமோ நியாயமோ இல்லவே இல்லை. நமது தேவைக்கு அதிகமாகவே காப்பி விளைச்சல் நாட்டில் எப்போதும் போல இந்த வருஷமும் ஏற்பட்டிருக்கிறது.

அப்படியானால் பஞ்சம் ஏற்படக் காரணம் வினியோக முறையில் பதுக்கல் இருப்பதே யாகும்.

பதுக்கலோ பதுக்கல்!

சென்ற ஜூன் ஜூலையில் காப்பிபோர்டு 2500 டன்களுக்கு மேல் வழக்கம்போல் ஏலம் விட்டது.

ஏலமெடுத்த வியாபாரிகள் சில்லரை விற்பனைக்கு காப்பிக் கொட்டையை வெளிக்கொண்டு வராமல் பதுக்கிவிட்டதாகத் தோன்றுகிறது. வேண்டுமென்றே பஞ்ச நிலை சிருஷ்டிக்கப்பட்டது.

அவதி

காப்பிக்கொட்டை கிடைக்காமல் மக்கள் அவதிப்பட நேரிட்டுள்ளது. வியாபாரிகள்கூட இப்போது சங்கடத்திற்கு ஆளாக நேரிட்டுள்ளது!

இந்த மாதம் காப்பி போர்டு ஏலம் விடும்போது அநேக வியாபாரிகள் என்னிடம் வந்து ஏலம் வேண்டாம் என்று சொன்னார்கள். நான் காரணம் கேட்ட போது உண்மை வெளி வந்தது!

போன தடவை நாங்கள் ஏலம் எடுத்த மூடைகளே இன்னும் செலவாகவில்லை என்று சொன்னார்கள்!

மக்கள் காப்பிக்கொட்டைக்கு தவிக்கும்போது கையிருப்பு இருந்தும் அதை வெளிக்கொணராமல் பதுக்கினர். லாபம் ஒன்றுதான் இவர்கள் குறிக்கோள் என்று தோன்றுகிறது!

நான் ஏலம் நடக்கும் என்று அறிவித்தேன். பிறகு கட்டுபாடாக வியாபாரிகள் விலையைக் குறைத்து கேட்டார்கள். குறைந்த விலைக்கே ஏலம் விடப்பட்டது இப்போது ஏலம் எடுத்த மூடைகளை கைவசப்படுத்த பணம் இல்லாது தவிக்கிறார்கள் வியாபாரிகள்! (சென்ற ஏலத்தில் எடுக்கப்பட்ட ஸ்டாக்கை விற்றிருந்தால் கையில் பணம் இருந்திருக்கும் கொள்ளைலாபம் கருதி பழைய ஸ்டாக் பதுக்கப் பட்டது என்று சூசகமாக திரு. விஸ்வநாதன் அறிவித்தார்.)

லோகியா கட்சி தனியாகப் போட்டியிடுமாம்

எர்ணாகுளம், அக். 14—

கேரளத்தின் சோஷலிஸ்ட் கட்சி, (லோஹியா கோஷ்டி) வரப்போகும் தேர்தலில் குறிப்பிட்ட தொகுதிகளில் தனியாக அபேட்சகர்களை நிறுத்திப் போட்டியிடும், என்று சோஷலிஸ்ட் கட்சியின் கேரளக்கிளைத் தலைவர் திரு. பால் குன்னில் அறிவித்துள்ளார். காங்கிரசுடனோ, கம்யூனிஸ்ட் கட்சியுடனோ அக்கட்சி எவ்வித உறவும் கொள்ளாது, என்றும் அவர் கூறினார்.

மாதவரம் தோல் பதனிடும் தொழிலாளர் கூட்டம்

மாதவரம், அக். 10—

மாதவரம் தோல் பதனிடும் தொழிற்சங்கப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. பண். துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் உணவுப் பிரச்சினை மிகப் பெருமளவுக்கு தொழிலாளிகளை பாதிக்கிறது. சென்னை அரசாங்கம் நியாயவிலைக் கடைகளை போதுமான அளவுக்கு திறந்து விலை உயர்வை கட்டுப்படுத்தவில்லை என இக்கூட்டம் கருதுகிறது. மேலும் மக்களுக்கு மலிவான விலையில் படி அரிசி 12 அணாவிற்கு கிடைக்கவும், 500 குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக்கடை விகிதம் திறக்கவும், 10 ஏக்கர் நிலங்களுக்கு மேலுள்ளவர்களிடம் கட்டாயகொள்முதல் நஷ்டஈடுடன் செய்யவும் உணவு வினியோகிக்கும் பணியை மக்கள் உணவு கமிட்டிகள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும் எனக் கோரியும் இதை வற்புறுத்தி அரசியலாரை செயல்படுத்த நியாயமானதும்-அமைதியானதுமான முறையில் நடத்தப்படவிருக்கும் போராட்டத்தில் பங்கு கொள்வது எனவும், இப்போராட்டத்தை வெற்றிகரமாக்கி தொழிலாளர்கள் தலைக்கு 4 அணா நிதி அளிப்பது எனவும் தீர்மானம் நிறைவேறியது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி

காரும் சேர்ந்தே தொழிலை நடத்தவேண்டும் கடைசிப் படியாகத்தான் சமூக உடைமையாக தொழிற்சாலைகள் மாற முடியும் என்று பிரஜா சோஷலிஸ்டு கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் கூறினார்.

திரு. கே பாலசுப்பிரமணிய அய்யர் பேசுகையில் அவசரமான தீவிரம் எதிலுமே கூடாது என்று கூறினார். கைத் தொழில்கள் வளர இயந்திரம் போட்டியாக வந்துவிடுகிறதே என்று அவர் அங்கலாய்த்தார்!

எல்லா தொழிலுக்கும் மின்விசை அவசியம் இல்லையென்றும் நிதானமான திட்டம்தான் தேவை என்றும் அவர் கூறினார். மேல்சபை அங்கத்தினரான தமக்குக் குழுவில் இடம் கொடுத்ததற்காக அவர் மந்திரிக்கு நன்றி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் டாக்டர் ஸ்ரீமதி சௌந்திரம்ராமச்சந்திரன் பேசினார்.

நடக்கஇருப்பவை

16-10-59 இரவு 7 மணிக்கு 21-வது வட்டம் அப்பாசாமிப் பிள்ளை தோட்டத்தில் எம். கிருஷ்ணன் தலைமையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

★

இன்று மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி ராஜா கல்விக் கழகத்தில் ஜீவானந்த டி. எஸ். ஸ்ரீபால் மணிவிழா; திரு. நாரண துரைக்கண்ணன் தலைமையில் டாக்டர் எம் ராஜமாணிக்கனார் ஸ்ரீபாலுக்கு கதராடை போர்த்துவார்.

★

பாலர் அரங்கம்: அரசாங்க மாளிகை; மவுண்ட்ரோடு- வெள்ளி (16-10-59) மாலை 4 மணி முதல் 5-30 வரை "உங்கள் நண்பன்", 'சிட்டியும் சுட்டியும்" என்ற திரைப்படங்கள் காட்டப்படும். (குழந்தைகளுக்கு 12 ந. பை, 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 25 ந. பை.)

★

பின்னி ஸ்டாப் யூனியன்: பின்னி கம்பெனி ஊழியர்களின் கோரிக்கைகள் நிர்வாகிகளால் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து இன்று (16-10-59) மாலை 6 மணிக்கு கோகலே மன்றத்தில் பொதுக் கூட்டம். தலைவர் திரு. மோகன் குமாரமங்கலம்; பேச்சாளர்கள்: திரு ஆர். ராமநாதன், வி ஜி. ராவ் (பார்-அட்-லா), ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி, என். வி. நடராஜன், வி. எஸ். கோவிந்தராஜன், மற்றும் பலர்.

ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிட்டவர் எஸ். கிருஷ்ணசாமி ஆசிரியர்: ப. ஜீவானந்தம். முகவரி 32, பிராட்வே, சென்னை-1.
Janasakthi
Broadway, Madras-1.

உணவுப் போர்! உங்களது உரிமைப்போர்! அணிதிரண்டு வாரீர்!